. M. 2026. இரக்தாக்ஷி௵ பங்குனி௴ April 1925.

ஓம்

# சன்மார்க்க பானு

தொகுதி 1 பகுதி 3



VOL I.] SANMARGA BHANU [NO. 3.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... ... 65
2. தாய் மொழி... ... ... ... 66
3. தியானம் ... ... ... ... 69
4. ஜெ. வி. போவின் ஆராய்ச்சி ... 72
5. நடுத்தர இந்திய வாழ்வின் நெருக்கடி... 76
6. வேமன யோகியின் ஜீவிய சரித்திரம் ... 80
7. கல்விக் குறிப்புகள் ... ... ... 83
8. புருஷார்த்தம் ... ... ... 88
9. ஔவை அநுபவங்கள் ... ... 90
10. தொற்று வியாதிகள் ... ... 95
11. பஞ்சாங்கம்,


SB

Editor: Pandit P. Srinivasalu Naidu.

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor, and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS 3- JUL 1925

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப் படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு ரூபா. | 10-0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, ,, | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத் தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

# சன்மார்க்க பாநு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } இரக்தாக்ஷி ஹூ பங்குனி மீ. { கதிர் 3

## கடவுள் வணக்கம்.

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற் காளாகவோ
ஆடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

விண்ணூறு வெற்பின் விழுந்தாங் கெனமார்பிற்
கண்ணூறு பாய்ச்சிடுமென் காதல்வெள்ளங் கண்டிலையோ
தண்ணூறு சாந்தபதத் தற்பரமே நால்வேதப்
பண்ணூறு மின்பப் பதியே பராபரமே.

# சன்மார்க்கபானு.

இரக்தாட்சி ஹூ பங்குனிமீ.

## தாய் மொழி.

ஒவ்வொரு நாட்டினர்க்கும் அவரவர் பிறந்த குலத்திற்கேற்ப ஒவ்வொரு பாஷை யுண்டு. தாய் தந்தை முதலிய உற்றோரால் பேசப்பட்டு, அவர்களால் குழந்தைப் பருவத்தில் தமக்குங் கற்பிக்கப் பட்ட பாஷையே தாய்ப் பாஷையாம். எப் பாஷயை முதன் முதலாக அறிகின்றோமோ, எப்பாஷையின் மூலமாய்ப் பிற பாஷைகளின் பொருள்களை அறிந்து கொள்ளுகின்றோமோ, மனைவி மக்கள் உற்றார் உறவினரிடம் எக்காலத்தும் பேசுவதற்குக் கருவியா யிருப்பது எம்மொழியோ அது தாய் மொழியாம்.

பாரில் வழங்கும் பாஷைகள் பல. அவற்றுள் சில தனிப் பாஷைகள்; சில கலப்புப் பாஷைகள். சிறப்புற்றவை சில; சிறப் பற்றவை சில. பிறபாஷைகளின் உதவியின்றியே வழங்கக் கூடியது தனிமொழி. குறைவற்ற இலக்கண வமைதியுடையது சிறப்புற்ற பாஷை. சில பாஷைகள் இலக்கண வமைதி பெருதனவாயும், சில வரிவடிவு பெருது ஒலிவடிவம் மாத்திரம் பெற்றனவாயு முள்ளன.

நமது தாய்ப் பாஷை தமிழ். 'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்று பொருள். இனிமை என்னும் குணப்பெயர், அக்குணத்தை யுடைய மொழிக்கு ஆயிற்று. இவ்வாறு தலைக் 'குணவாகுபெயர்' என்னும் இலக்கண நூல். ஆகலின், 'தமிழ்' என்பதற்கு 'இனிமை யான பாஷை' என்பது பொருளாம். தமிழ் மொழி தனிமொழி. இதன் வரலாறு நூல்களில் பரக்கக் கூறப்பட்டுள்ளது. பிறமொழி

களினும் இது சிறப்புடையதெனக் கழறுவது பிறமொழியாளர்க்கு வருத்த முண்டாக்குவதா மென்றவ்வாறு செப்பார் தொழியினும் எம்மொழிக்கும் தாழ்ந்ததல்ல வென்றேனும் கூசாமற் கூறலாம்.

ஒவ்வொருவரும் தத்தமக்குரிய பாஷையைப் பொன்னே போற் போற்றக் கடமைப் பட்டவராவர். நடப்பன பறப்பன வாதிய அஃறிணைப் பொருள்களும் இயல்பி னமைந்த தம் மொழிகளைப் போற்றுதல் கண்கூடு. மேலும், தம் மொழியில் ஏதேனும் குறை யிருப்பினும் சீர்திருத்தஞ் செய்து உயர்நிலையினுய்த்தற் குரியார் அறிவாளிகளா யுள்ள மேன்மக்களேயாவர்.

மதக்கொள்கை, நாட்டின் பண்டையநிலைமை, முன்னோரது ஒழுக்கமுறை முதலியன தாய்ப்.பாஷையின் மூலமாகவே அறியக் கிடப்பனவாம். தாய்ப் பாஷைப் பயிற்சி யில்லாதோர் அவற்றை நன்கறிய வியலாதாகலின், அன்னோர்க்குத் தம் மதம் தம் நாடு முதலானவற்றி னிடத்துப் பற்றுண்டாதலரிது. அஃதில்லை யாகவே அவர்களால் மதத்திற்கும் நாட்டிற்கும் நன்மை யுண்டாகாமற் போவதுடன் தீமை நேர்வது முண்டாம். ஆகவே, அது தேசத் துரோக மதத்துரோகங்களுக் கேதுவுமாம்.

நமது அமிழ்தினு மினிய தமிழ் மொழியைத் தாய்மொழியாக வுடையோரிற்பலர் தம் தாய்மொழியைப் புறக்கணித்து ஒழுகுவது விசனிக்கத்தக்கது. தமிழர்மட்டு மன்று ஏனைத் தெலுங்கர் முதலானோரும் அவ்வாறே யிருக்கின்றனர். இத்தகைய குறைகளெல்லாம் நம் நாட்டாரிடத்தேயே குடி கொண்டுள்ளன. ஆங்கிலம் அரசாங்க பாஷையாகவும் அழகான பாஷையாகவும் இருப்பதால் கற்கவேண்டியது இன்றி யமையாததே யெனினும், சொந்த பாஷையை அவமதிப்பது அழகல்ல. ஆங்கிலம் பயின்ற தமிழர் தமிழிற் பேசுவது தாழ்வெனக் கருதுகின்றனர் போலும். 'சார்' (Sir)' என்றால் மதிப்பாகவும் 'ஐயா' என்பதை அவமதிப்பாகவும் நினைப்போர் பலருளர். 'பி. ஏ.,' முதலிய பட்டதாரிகளிற் பலர் கூட்டங்களில் 'தமிழில் பேசத்தெரியாது' எனவாய் கூசாது கூறுகின்றனர். தப்பித்தவறி பேசுவதாயினும் ஆங்கில மொழியைக் கலவாமல் பேசுவதில்லை. இவ்வாறு பேசுவதை ஆங்கிலேயரே

வெறுக்கின்றனர் என்பதை இவர்கள் அறிவதில்லையோ? அறிந் தாலுமென்ன! இவ்வாறு வேலியே பயிரை மேய்ந்தால் அப்பயிரின் கதியாது? தற்காலமுள்ள இங்கிலேயிலேனும் தாய்மொழி பழிவின்றி யிருப்பதற்குக் காருண்ய துரைத்தனத்தாரின் கருணையே காரண மாம். உயர்தரக் கலாசாலைகளில் தமிழ்ப் பாஷையைக் கட்டாயபாட மாக வைத்திருந்தும் மாணவர்கள் விருப்பத்தோடு கற்பதாகத் தெரியவில்லை. பி. ஏ., முதலிய வகுப்புகளிலும் தாய்ப் பாஷையைக் கட்டாய பாடமாக வைக்கத் துரைத்தனத்தார் ஏற்பாடு செய்வார்க ளாயின் பேருதவி யாகும். தாய் மொழியைக் கற்பிக்கும் பண்டிதர்களேயும் சம்பளங்களேயுயர்த்தியும், உதவிப் பரீக்ஷகர் களாக நியமித்தும் மேன்மைப் படுத்துவதும் தாய்ப் பாஷையில் ஊக்க மூட்டுவதற்கு அத்தியாவசிய மானதாகும்.

உயர்தரச் கலாசாலைகளில் கணிதம், சரித்திரம், பௌதிக சாத்திரம் முதலியவற்றைப் பிரியமானல் தேச பாஷையிலேயே கற்பிக்கலாமென்று நமது அரசாங்கத்தார் உத்தரவளித் திருக்கின்ற னர். இதை ஆதரிக்கும் பொறுப்பு கலாசாலைத் தலைவர்களேயும் உபாத்திமார்களேயும் சேர்ந்தது. நம்மவரது தாய்ப் பாஷைப் பற்று எவ்வளவி லிருக்கின்ற தென்பது இம்முறையைக் கைக்கொள் வதனுல் வெளியாம். அது இனிதான் தெரியவேண்டும். 'சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுப்பது கொஞ்சத்தி லிருக் கிறதா?'

வியாபாரிகள் முதலானவர்கள் தப்புந் தவறுமாக எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டதே எல்லாந் தெரிந்துகொண்ட தாகக் கருதி, தங்கள் தொழிலில் நுழைந்து விடுகின்றனர். நமது தருமைத் தமிழ்மொழியை இவ்வாறு தவிக்க விடுவது தமிழ் மக்களுக்குத் தகுதி யாகுமா?

இதை வாசிக்கும் நேயர்கள் இனியேனும் தாய்ப் பாஷையிற் பற்றுடையராய் அதனைப் பழைய நிலையிலுய்க்க முயலும்படி வேண்டுகின்றேம்.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ

# தியானம்.

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

விஷயங்களிலுள்ள குற்றங்களைக் கண்டு வைராக்ய மடைந்தும், உபநிஷத அர்த்தங்களைப் பலகால் சிரவணித்தும், பல யுக்திகளால் மனனம் பண்ணியும் யாதாமோர் பிரதிபந்த வசத்தால் அதனை அபரோக்ஷீகரிக்க முடியாதவனே இத்தியானத்திற்கு அதிகாரியாகின்றான். அதாவது அதற்கு வைராக்யம் பரோக்ஷஞானம் அநுராகம் என்பவை வேண்டும். விதி விசுவாசம் இச்சை அடம் என்பவை தியானத்திற்குச் சாதனங்களாம். 'மனத்தைப் பிரம்மமென உபாசனை செய்,' 'சூர்யனைப் பிரம்மமென உபாசி' என்று ஒருவனைப் பிரவிர்த்திக்கும்படி செய்கின்ற சாஸ்திர வசனம் விதி எனப்படும். அவ்வசனத்திலும் அவ் வஸ்துவாலுணர்த்தப்படும் வஸ்துவிலும் புருஷனுக் குண்டாகும் உறுதியான விசுவாசமே சிரத்தை எனப்படும். இஷ்ட தெய்வத்தி னிடத்தும், வேதம் குரு மந்திரம் தீர்த்தம் இவைகளினிடத்தும், மகாபுருஷர்களிடத்தும், ஔஷதங்களி னிடத்தும் எவ்வளவு விசுவாச முண்டோ, அவ்வளவே ஒருவனுக்கு இஷ்டசித்தி யுண்டாகின்றது. புருஷனுக் குண்டாகும் அநுராகமே இச்சையாம். மனத்தை ஓடவிடாது தியேயத்தி னிடத்தே பிடிவாதமாக நிற்கவைத்தல் அடமாம்.

வைராக்ய முண்டாதற்கு ஏதுவாக அதன் நிரூபணம்:—புருஷனுக்குக் கர்ப்ப வாச முதல் உடல் விழுமளவும் எல்லா அவஸ்தைகளிலும் துக்கமாம். தாயினது உதரத்தில் மல மூத்ரமத்தியிலிருத்தலும், மலப் புழுக்களாற் கடி யுண்டலும், அல்லது தாயின் அசைவால் மெலிதலும், தாய் வயிற்றிலுள்ள சடராக்கினியால் தபிக்கப்படுதலும் கர்ப்ப வாச துக்கமாம். பிறந்தபிறகு தன் மல மூத்ரங்களில் உளைதலும் தலை கவிழ்ந்து படுத்துக்கிடத்தலுமாகிய பால்யாவஸ்தை துக்கமாம். அதன்பிறகுகுமாரப் பருவத்தில் தம்மவர்களாலும் மற்றவர்களாலும் அடிக்கப் படுதலாலும் அறியாமையாலும் அநுசிதகார்யஞ் செய்வதாலும் துக்கமாம். எவ்வனத்தே பெரியோரின் அவமதிப்பாலும் காம வியாகூலத்தாலும் துக்கமாம். முதுமைப் பருவத்தில் உருவ மாறுதலாலும் எல்லோராலும் அவமதிக்கப் படுவதாலும் புத்திக் குறைவாலும், க்ஷயம் ஈளை சொரிதல் தடுமாற்றம் முதலியவைகளாலும் மிகத்துக்கமாம். முதுமையில் சுவாஸ்தை (நோயின்மை) என்பது ஒருகாலுங் கிடையாது. இதனடுவில் சுரம் குன்மம் சூலை முதலிய கடும் வியாதிகளால் துக்கம். மரண சமயத்தில்

சரீர நீக்க பயத்தால் வரும் நடுக்கமும் பூட்டுகள் விடலும் ஊர்த்வ சுவாச கதியும் எதிர்ப்பட்டவர்களைக் கண்டு வருத்தப்படுவதும் துக்கமாம். இறந்த பிறகு மிக்க ஆதரவோடு பரிமாறிய அன்னச் சுடுகை பொறுமல் சினம் கொண்டவன் இடுகாட்டில் எரிதழலின்மீது சகித்துப் பற்றிக் கொள்வதையும் பார்க்கின்றோம். இம்மட்டோ! கணத்திடை தோன்றிக் கணத்திடை கரக்கும் கொப்புட் செய்கை யொப்பிய யாக்கையின் நிலைமை எண்ணுந்தோறும் நெஞ்சு திடிக்கும். ஆதலால் புருஷன் பிறந்தவுடனே பாலியமும் பின்பு எவ்வனமும் அதற்குமேல் தடுக்கப்படாத கிழத்தனமும் பெற்று அப்பால் மிருத்யுவின் வசமடைகின்றான். பிராணிகளிடத்தில் இவையெல்லாம் உண்டாவது எல்லோருக்கும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றன. பிறந்தவன் இறப்பதுண்மை; இறந்தவன் பிறப்பதுண்மை என்னும் அர்த்தத்திற்குச் சாஸ்திரங்களே பிரமாணங்களாம்.

பிறப்பிறப்பு ஆத்மாவுக்கில்லை. இத்தேகம் பிறப்பதற்கு முன்னும் ஆத்மா உண்டு. உடல் நசித்த பிறகும் ஆத்மா உண்டு. சமைத்த அன்னுதிகள் சில நேரத்திற்குப் பின் தானேகெட்டு விடுவதுபோல், அன்னுதிகளா லாக்கப்பட்ட இச்சரீரமும் சில காலத்திற்குப் பின் தானே கெட்டுப் போகும். இதனிடத்து வாஞ்சை கொள்வது வியப்பே யாகும். அன்ன பானுதிகளால் பசி தாகந் தீருகிறதும் அவ்வவ் வுபாயங்களால் உபத்திரவங்கள் விலகுகிறதும் சுகமென்று நினைப்பது விவேகமல்ல. அவைகளைத் தேடுவதற்காகச் செய்யும் பிரயாசையால் வருந்துக்கம் சொல்லத் தரமல்ல. உடம்பு வலி யுள்ளவனுக்கு உடம்பை மிதிப்பதும் குத்துவதும் சுகமெனக் கருதப் படுகின்றன. பாலிய எவ்வன ஜரா மரணுதி அவஸ்தைகள் தேகத்திற்கே யல்லாமல் ஆத்மாவிற்கில்லை. ஆத்மா சுகசொரூபம். சரீரத்தில் ஆத்மா பிறப் பிறப் பற்றவனுய் அழியாது எப்போது முள்ள பொருள். உலகிற் பிறந்தவர் (ஆடவராயினும் மகளிராயினும்) ஆத்ம தியானஞ்செய்து அதற்கு இதந்தேடுவது அத்தியாவசியமாம்.

பாலியஞ் சென்று எவ்வனத்தில் அதைத் தேடுவோம் என்றும் எவ்வன மடைகின்றபோது வார்த்திகத்தில் அதைச் சம்பாதிப்போம் என்றும் நினைப்பார். அப்பால் வயது முதிர்ந்து மூப்புவந்து இந்திரியங்கள் பலவீனப்பட்டுப்போன வளவில் 'இனி என்னசெய்வோம்? திடகாத்திரமா யிருந்தபோதே உடம்பினைப் பெற்றதற்குப் பயனுய உடம்பிலுள்ள உத்தமனைக் காணுது மூடமாய்ப் போயினேமே' என்று சோகிப்பார். பாலியத்தை நானுவித விளையாட்டாற் கழித்தும், எவ்வனத்தை உண்பது முடுப்பதுமே போந்தநெறி என்று போக பரவசத்தாற் போக்கியும், வார்த்திகத்தை அசக்தியினுல் விருதா வாக்கியும் தங்களாயுசை 'இது

தான் லோகம் இதைக்காட்டிலும் வேறென்ன இருக்கின்றது' என்று வம்புரையிட்டு தெய்வத் தியானமின்றி அந்தோ! கழிக்கின்றூர்கள். ஏகாலியன் கங்காப் பிரவாகத்தி லிருந்தாலும் தாகமெடுத்தபோது அத் தண்ணீரை யருந்தாமல் இத்துணி தோய்த்தாகட்டும் இவ் ஆடை வெளுத் தாகட்டும் என்று போக்குதல் போல் தாபந்திரயங்களைத் தவிர்க்கும் தூயபதத்தைத் தியானித்துத் தாபசமனம் பண்ணிக்கொள்ளுகின்றூரிலர். செம்படவன் இந்த மீன் பிடித்தாகட்டும் இந்த மீன் கிடைத்தாகட்டும் என்றல்போல், ஆசை வலையை வீசி இவ்வெண்ணம் நிறைவேறட்டும், இம்மனோரதம் பூர்த்தி யாகட்டுமென்று போது போக்குவார். தரித்திர னொருவன் தான் வசிக்குமிடத்தின் கீழ் தனக்குவியலிருந்தும் அதைக் காணுது நல்குரவால் மெலிகின்றதுபோல், தனக்குள் சுகநிதியான ஆத்மா விருந்தும் தினசரி சுழுத்தியில் அந் நிர்விஷய சுக மனுபவித்தும், தேக வயப்பட்டு மெலியாமல், அத்தரித்திரன் அத்தனத்தை அஞ்சனத்தா லறிந்து துக்கநீக்கிச் சுக மனுபவிப்பதுபோல், அடங்கிக் கிடக்கும் ஆத்ம தனத்தை தியான அஞ்சனத்தால் தெரிந்து துக்க நீக்கி நிரதிசய சுக மடைதல் வேண்டும்.

இவ்வாறு நிராசை யுற்றவன் சுருதி சிகரத்தே யொளிரும் வஸ்து உண்டென்பதில் சிறிதும் ஐயமிலனுய் அதை யடைய ஆர்வ மிக்குடை யவனுய்ச் சாஸ்திரங் கூறும் சித்த வமைதிக்கான தியானத்தைச் செய் வான். அத்தியானம் சகுணத்தியான மெனவும் நிர்க்குணத்தியான மெனவும் இருபகுப்பாகும். மற்றுமுள்ள பல்வகைத் தியானங்களும் இவற்று ளடங்கும். தியானம் மேன்மை யானதென்று ஸ்ரீபகவான் 'சிரேயோஹி ஞானமப்யா ஸாத் ஞானுத்தியானம் விசிஷ்யதே' விஷய உணர்வில்லாமல் அப்யாசிப்பதைக் காட்டிலும் அவ் விஷயத்தின் (பரோக்ஷ) ஞானம் மேலாம். ஞானத்தைக் காட்டிலும் தியானம் சிறந்தது என்று அருளினுர்.

சகுணத்தியானம்:—இதனையே சாகார தியானமென்றும், சவிசேஷ தியானமென்றும், சாலம்ப தியானமென்றும், சகள தியானமென்றும் சொல்லுவார்கள். மனக்கமலத்தில் ஈசுவர மூர்த்தத்தைச் சிந்தித்துக் கொண்டு ஆழ்ந்த தியானத்திருத்தல் சகுணத் தியானமென்று விழுமி யோர் உரைப்பர். அவ்வீசுவரர் எத்தன்மையரென்றூல்:—நாம ரூப கிரி யான் மகமான திருசிய உலகின் இறப்பு எதிர் நிகழ்வென்னும் முக் காலங்களைச் சாமானியமாகவும் விசேஷமாகவும் அறியும் ஆற்றலுள்ள வர். அல்லது சர்வத்திலும் 'ஞ' (ஞான) சொரூபமாக விளங்குகின்றவர். தற்சொரூப மறைப்பின்றி முக்குண மாயையைத் தன்வசமாக்கிப் பூத

பௌதிகப் பிரபஞ்சத்தை ஆக்கி அழித்துக் காக்கும் முறையை மாறு படாமற் பற்றின்றிச் செய்யும் சக்தியை யுடையவர். மதிகதிர்தாரகை அந்தரிக்ஷம் பூராதிய உலகங்கள் என்னும் இவைகளையும் நரர் சுராதி யரையும் அவரவரடையும் புவனங்களையும் தத்தம் எல்லை கடவாது தன் ஆணையால் நிறுவும் சேதி சமானமா யுள்ளவர். (தொடரும்.)

க. அரங்கநாதப் பிள்ளை,

வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

---

## ஸர் ஜெகதீச சந்திர போஸின் ஆராய்ச்சிகள்.

(43-ம் பக்கத் தொடர்ச்சி).

இப்போது நடந்த ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிக்கும்போது ஸர் போஸ் அமெரிக்காவி லிருந்தார். அப்பொழுது அவருடன் நெருங்கிப் பழகியவரும், ("Scientific American") "ஸைன்டிபிக் அமெரிகன்" என்னும் ஓர் பிரசித்திபெற்ற மாதாந்தரப் பத்திரிகையின் பத்திராதிபரு மான கீம்பர்ட் (Kaempfert) என்னும் ஓர் பெரிய ஐரோப்பியர் பின் வருமாறு அவரை வர்ணிக்கிறார்:—"கொஞ்சம் பருத்த உடலும், நீண்ட சொக்காயும், தங்க மூக்குக் கண்ணாடியும், வெகு சுருசுருப்பான அவயவங் களும், வசீகரமான முகமும், பிரகாசிக்கும் கண்களுமுடைய இந்த ஸர் ஜெ. ஸி. போஸ் என்பவர் பேசுவதே ஓர் உத்ஸாகத்தையும் ஆச்சரியத் தையும் உண்டுபண்ணுகிறது. அவருடைய கம்பீரமான தோற்றமும் கௌரவமும், பிறரிடத்துள்ள மரியாதையும், டாம்பீகமின்மையும் ஆகிய இவைகளே மற்ற எக்குணங்கள் இல்லாமற் போனபோதிலும் பிறர் மனதைக் கவரக்கூடியவை யென்றால், மற்ற குணங்களும் பொருந்தி யிருக்கும்போது கேட்கவும் வேண்டுமா? அவருடைய பிரசங்கங்கள் ஒவ் வொன்றும் ஷேக்ஸ்பியர் (Shakespeare), டென்னிஸன் (Tenny-son) முதலிய கவிகளின் புஸ்தகங்களை மனனம் செய்த மேல்நாட்டு சாஸ்திரிகளின் பிரசங்கங்கள் போலவே மிகவும் அருமையானவைகளாக இருக்கின்றன. மேலும் அவைகளை விட இன்னும் மேன்மையான வைகள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் மேல்நாட்டு சாஸ்திரி கள் இயற்கை சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யச் செய்ய அவர்களுடைய மனமானது ஈசுவர சிருஷ்டியின் அழகையும் மேன்மையையும் மறந்து

சிறு விஷயங்களில் சென்று விடுகின்றன. டார்வின் (Darwin) என்ற ஜீவவர்க்க சாஸ்திரி ஒருவர் ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட பிறகு அவர் மனம் காவ்யங்களின் அழகையும் அவைகளின் மேன்மையையும் தெரிந்து கொள்ள சக்தியற்றதாகி விட்டதென்று தானே கூறியிருக்கிறார். ஆனால் போஸ் என்பவருக்கோ ஜீவவர்க்கங்களை ஆராய்ச்சி செய்யச் செய்ய அவைகளின் இயற்கை யழகும் சிருஷ்டி கர்த்தாவின் மேன்மையும் மேன்மேலும் அதிகரித்து நன்கு விளங்குகின்றன. * * * * *

"அவர் பிரகிருதி சாஸ்திரத்தில் மகா நிபுணர் அதில் எவ்வளவு நுட்பமான விஷயமும் அவருக்கு ஞாபகத்திலிருக்கிறது. ஆனால் அவருடைய சம்பாஷணை மற்றவர்களுடையதைப்போல் பிறருக்கு அருவெறுப்பை உண்டு பண்ணக கூடிய விவரங்களடங்கியதாக இராமல், சாஸ்திரமென்றால் என்ன என்பதே தெரியாமலிருக்கக் கூடிய பாமர மனிதனுக்கும் ஓர் உணர்ச்சியை உண்டுபண்ணக் கூடியபடி அவ்வளவு உருக்கமாகவும், தெளிவாகவும் இருக்கிறது. மிகவும் அபூர்வமான அவருடைய இயந்திரங்களையும். கருவிகளையும் அவர் வர்ணிக்கும்போது இவை தேவலோகத்து வஸ்துக்களோ எனச் சந்தேக முண்டாகிறது. அவர் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு பதமும் வைரம் முத்து என வெகு சிரமத்துடன் பொருக்கி எடுக்கப்பட்ட வைகள்போல் இருப்பதுடன் இவர் ஒரு கவியோ என ஐயமுறும்படி அவருடைய மேலான கல்வியைக் காண்பிக்கின்றன. ஓர் செடியைப் பற்றியோ அல்லது கொடியைப் பற்றியோ அவர் பேசும்போது அது இலையும் பூவும் காயும் உள்ள ஓர் ஜடவஸ்துவாக இராமல் ஏதோ கை கால்களையுடைய ஓர் உயிருள்ள வஸ்துவாகவே தோன்றுகிறது. அவைகளுக்கு ஆத்மா உண்டு என்று அவர் சொல்லாவிடினும், அவர் அவைகளையும் மனிதர்களைப்போலவும் மிருக பக்ஷியாதிகளைப் போலவும் கருதுவதாகத் தெரிகிறது. ஏனெனில் அவருடைய முன்னோர்கள் அவ்விதம் சாஸ்திரங்களில் எழுதிவைத்திருப்பதற்காகவல்ல; அவருடைய ஆராய்ச்சிகளே அப்படி நிரூபிக்கின்றன. மரியாதையினாலோ அல்லது உதாரகுணத்தினாலோ அவர் மதவிஷயமாகப் பிறர் பேசும்போது சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் சாஸ்திர விஷயமாக அவர்கள் பேசும்போது ஏதாவது பிசகுகள் ஏற்படுமானால் அவைகளை உடனே புன்சிரிப்புடனும் மரியாதையாகவும் போதிய சமாதானங்களுடன் திருத்திவிட்டு மறுவேலை செய்வார். அவர் சொல்லும் சமாதானங்களை மறுப்பதற்கு ஒருவராலும் முடியாது. * * *

* * * * படித்தவர்களுக்கும் சந்தேகத்தை உண்டுபண்ணுவனவும் வெவ்வேறாகத் தோன்றுவனவுமாகிய அநேக விஷயங்களை ஞான வாயிலாக ஒன்று சேர்த்து அவைகளில் ஒரேதன்மையாகிய ஈசுவரத்தன்

மையைக் காண்கின்ற இவருடைய அபார சக்தியும் ஞானமும் பெரிய வேதாந்திகளாகிய மகரிஷிகளிடத்தில்தான் காணப்படுமேயன்றி மற்றவர்களிடத்துக் காண்பது அரிதினும் அரிது'' என இவ்விதமாக வர்ணிக்கிறார்.

இவ்விதம் கல்கத்தா கல்லூரியில் வேலையிலிருந்து கொண்டே ஸர் போஸ் இடைவிடாது வேலைசெய்யத் தொடங்கினர். மேல்நாட்டு சாஸ்திரிகளால் கண்டு பிடிக்கப்படாத பல நூதன விஷயங்களைக் கண்டு பிடித்தார். அவர்களால் பரிசோதனை செய்து பார்த்து மிகவும் கடினம் என்று அரை குறையாக விடப்பட்ட விஷயங்களெல்லாம் இவருக்கு மிகவும் இலகுவாகவே இருந்தன. இவரால் கண்டு பிடிக்கப்பட்டவை ஒவ்வொன்றும் (நூதனமாகவும்) முன்பின் கேட்டிராததாகவும் ஆச்சரியகரமானதுமாக இருந்தது. நாளடைவில் இவருடைய பெயர் உலகமெங்கும் பரவிற்று. சாஸ்திர ஞானமுள்ள ஒவ்வொருவரும் இவரைப் பார்த்து இவருடைய பிரசங்கங்களைக் கேட்க வேண்டுமென்று ஆவல் கொண்டார்கள். ஐரோப்பாவில் அநேகமாய் எல்லா தேசத்திலிருந்தும் இவரை அழைக்கத்தலைப் பட்டனர்.

அநேகர் வேண்டுகோளுக் கிணங்கி இந்தியா கவெர்ன்மெண்டார் இவரைத் தங்களுடைய செலவில் ஐரோப்பாவிக்குப் போய் பிரசங்கம் செய்யும்படி வேண்ட ஸர் போஸ் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு ஐரோப்பாவை அடைந்தார். அப்போது மேல் நாட்டு சாஸ்திரங்கள் கொஞ்சம் கலவர மடைந்திருந்த சமயமாக இருந்தது. மாக்ஸ்வெல் (Maxwell) என்ற ஓர் கேம்பிரிட்ஜ் புரொபசர் தன்னுடைய ஆராய்ச்சிகளின் மூலமாக 'வெளிச்சம் என்பது பிரத்யக்ஷமானது பிரத்யக்ஷமில்லாதது' என இருவகை யென்றும் 'அவற்றில் பின்னால் சொல்லப்பட்ட வெளிச்சத்தின் கிரணங்கள் (அல்லது கதிர்கள்) நமது கண்ணுக்குப் புலப்படாவிடினும் உலக முழுவதும் நிறைந்திருக்க வேண்டு' மென்றும் யுக்தி அனுபவம் முதலியவைகளைக் கொண்டு தீர்மானித்து அதைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்திருந்தார். ஆனால் இம்மாதிரியான வெளிச்சத்தை பிரத்யக்ஷமாக்குவதற்கு நம் கண்ணைப்போல் மனிதனால் செய்யப்பட்ட ஓர் கருவி தேவையாக இருந்தது. அவ்விதமான ஓர் கருவியைத் தயார்செய்து விட்டால் அதைக்கொண்டு நமது கண்ணுக்குப் புலப்படாத மலை மனிதசரீரம் பனி முதலியவைகளையும் ஊடுருவி கண்ணாடியைக் கொண்டு பார்ப்பதுபோலப் பார்க்கலாமென்பது அவரின் நோக்கம். ஆனால் இம்மாதிரியான ஓர் கருவியைச் செய்து அதைக் கொண்டு "அப்பிரத்யக்ஷ ஒளி'' என்று ஒன்று இருக்கிறது எனச்சந்தேக

மற நிரூபிக்கக் கூடியவர்கள் ஒருவருமில்லே. கொஞ்சநாள் சென்றபிறகு பான் (Bonn) நகரத்து (Hertz) ஹார்ட்ஸ் என்னும் சாஸ்திரி ஒருவர் ஓர் சிறிய கருவியைக்கொண்டு இதை ஒருவாறாக நிரூபித்தார். அதன் பிறகு பாரிஸ் (Paris) நகரத்திய பிரான்லி (Branley) என்பவரும் உலோகத்தூளடங்கிய ஓர் குழாயாகிய coherer என்னும் ஓர் கருவியைக் கொண்டு இதை நிரூபித்தார். இக்கருவியைக்கொண்டே பிறகு மார்கனி (Marconi) என்பவரால் இப்போதைய ஆகாயத் தந்தி கண்டு பிடிக்கப் பட்டது.

இம்மாதிரியாக "Hertzin waves" என்று சொல்லப்படும் ஹார்ட்ஸி னுல் நிரூபிக்கப்பட்ட அப்பிரத்யக்ஷ ஒளியைப் பற்றி ஐரோப்பியர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும்போது தான் ஸர் ஜே. ஸி. போஸ் ஐரோப்பாவை அடைந்து பிரசங்கம் செய்யலானுர். ஒவ்வொரு தேசத் திலுமுள்ள பிரபலமான சாஸ்திரிகள் ஒருவர்தவருமல் எல்லோரும் ஒரு முறைக்குப் பன்முறையாய் மிக்க ஆவலுடன் அவருடைய அருமையான பிரசங்கங்களுக்கு வந்து கூடினுர்கள். பிரான்ஸில் பெயர்பெற்ற 'பாயின் கரே,' ஆங்கில சாஸ்திரத்தில் முதன்மையான 'கெல்வின்' பிரபு, வர்ண போடோ வேலையில் பேர்போன 'லிப்மன்', பெர்லினில் கீர்த்திபெற்ற 'வார்பர்க்' ஆகிய எல்லாரும் அவருடைய பிரசங்கங்களைக் கேட்டு, அவர் ஹார்ட்ஸியன் ஒளியைப்பற்றிச் செய்திருக்கும் அதி நுட்பமான ஆராய்ச்சிகளையும், அதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளை விட நூறுமடங்கு மேன்மையானதும் மிகவும் இலகுவாகவும் சாதுர்யமாகவும் அவரால் செய்யப்பட்டதுமான பரம சமான்யமான கருவிகளைக்கொண்டு அவர் அவ்வொளியைப் பிரத்யக்ஷமாக்கி நிரூபிப்பதையும் கண்டு மூக்கின் மேல் விரலைவைத்து பிரமிக்க லானுர்கள். 'வார்பர்க்' என்பவர் ஓர் பிரசங்கம் முடிந்ததும் தன் நண்பர் ஒருவரைப் பார்த்து "ஐயா இவர் ஓர் மலை விழுங்கி மகாதேவர் போலிருக்கிறதே! நாம் ஒருவருக்கும் தெரியாமல் நம்முடைய தொழிலை விட்டுவிட வேண்டியது தான் போ லிருக்கிறது! ஸர் போஸ் நமக்கென்று ஆராய்ச்சிக்காக ஒன்றும் பாக்கி வைத்திருக்கிறதாகத் தெரியவில்லை. எல்லாம் அவரே முடித்து விட்டார்" என்று சொன்னுராம். (தொடரும்.)

K. நடேசய்யர், B. A. L. T.,

சித்தூர்.

---

# நடுத்தர இந்திய வாழ்வின் நெருக்கடி.

## செல்வ நிலையின் சீர்குலைவு.

குறிப்பு: (இவ்விஷயமாக வங்காளரசாயன பண்டிதராகிய ஆச்சாரிய பி. ஸி. ரே அவர்கள் வங்காள பாஷையில் ஓர் வியாசம் வரைந்திருக்கின்றனர். அதன் சாரத்தை "தமிழ் ஸ்வராஜ்யா" ஓர் ஆங்கில பத்திரிகையினின்று மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கின்றது. அதனை மீண்டு பிரசுரிக்கின்றோம். சகோதர சகோதரிகள் ஆச்சாரியரின் குறிப்புகளையும் போதனைகளையும் படித்துணருமாறு வேண்டுகின்றோம்).

### நிலைமை என்ன?

'வாழ்வின் பந்தய ஓட்டத்தில் நாம் எங்கு நிற்கின்றோம்?' நடுத்தர வாழ்வுகொண்ட கனவான்களின் நிலைமை என்ன? கற்றறிந்த நடுத்தர வாழ்க்கையினர் ஜன சமூகத்தின் முதுகு எலும்புகள் ஏழ்மையினால் வலுக்குன்றி வருகின்றன. இந்த பரிதாப நிலைமையைக் கண்டு நமது உளம் நடுங்குகின்றது. நடுத்தர வாழ்க்கையினரின் சராசரி வரும்படி ரூபா 25 லிருந்து ரூ. 30 ஆகும் என்பது சிலர் கருத்து. ரூ. 30 ரூ. 35 கிடைக்கும் என்று சிலர் எண்ணுகிறார்கள். எவ்வாறு இருப்பினும் குறைந்தது ஐந்து "ஜீவன்களை" அவன் காப்பாற்ற வேண்டும். அவனுடைய மனைவி, குழந்தைகள், சில சந்தர்ப்பங்களில் அவனது கைம்பெண் சகோதரியும் அவளது குழந்தைகளும். இந்த சிறுசம்பளத்தைக்கொண்டு அவன் குடித்தனம் நடத்த முடியாது. மணங்கு அரிசியின் விலை ரூ. 10–12–0; எண்ணெயின் விலையோ வீசை ரூ. 1 ஆகிவிட்டது. நெய்ச்சுகத்தை நாடவே முடியாது. பண்டங்களின் அருமையையும் அகவிலை கிராக்கியையும் சொல்லி முடியாது. இதற்குமேலே துணிகள் ஜோடுகள், இன்னும் தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய 'ஆயிரம்' சாமான்கள். இதோடு பையன்களின் படிப்பையும் பெண்களின் கலியாணத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; இதுவே நடுத்தர வாழ்வின் நிலைமையாகும். நமது துன்பத்தின் ஆழத்தை இதினின்றும் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம்.

நமக்கு வீட்டிலும் சரி, வெளியிலும் சரி முழுச்சாப்பாடு கிடைப்பதில்லை. மாணவர்களின் விடுதியில் சாப்பாட்டுக்கு குறைந்தது ரூ. 15 பிடிக்கும். அவன் மாதச்செலவு ரூ. 35 வரையிலும் ஆகும். மாணவர்களுக்கு நோயை எதிர்க்கும் வல்லமை இல்லை. குளிர்காய்ச்சலுக்கு இரையாகின்றனர். உணவு சரியாய் ஏற்படாததால், அவர்களுடைய ஜீவதாது

குறைந்து நிற்கின்றது. குளிர்காய்ச்சலினால் சாகும் மனிதர்கள் வங்காளத்தில் மட்டும் சுமார் 12-இலக்ஷம். ஏழ்மைத்தனமும் அறிவின்மையுமே இதற்கு மூல காரணம். குளிர்காய்ச்சல் ஏழையின் நோய் என்று டாக்டர் பெண்ட்லி கூறுகின்றார். உணவு போதாமல் "கண்டதைத்" தின்பதினாலேயே, ஜனங்கள் குளிர்காய்ச்சலை வருவித்துக் கொள்ளுகின்றனர். கல்கத்தாவிலோ காசநோய் பரவி வருகின்றது. புதிதாய்ப் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகம் ஒரு ஆண்டிலேயே மாண்டு விடுகின்றன. வீட்டு வாடகையோ இரண்டு மடங்கு அதிகரித்து விட்டது. ஆனால் நடுத்தர "கனவானுடைய" சராசரி மாத வருமானம் ரூ. 40 ரூ. 50. குருட்டுச் சந்துகளில் வெளிச்சம் நுழையாத அறைகளில் அவர்கள் குடியிருக்க வேண்டியிருக்கிறது. வீடுகளைக் கண்டால் உடல் பதறும். தரை எப்பொழுதும் ஈரம். வீட்டுக் கதவுகள் சதா அடைப்பட்டு இருக்கும், குழந்தைகள் வண்டிகளில் அடிபடாமலிருக்கும் பொருட்டும், பெண்கள் படுதாவுக்கு வெளியே வராமலிருக்கும் பொருட்டும்.

## சுகாதாரக் குறை.

காற்றையும் ஒளியையும் களித்து அனுபவித்தவர் நம்மில் எத்தனை பேர்கள்? இவைகள் ஏழைகளுக்கு கடவுள் அளித்த நன்கொடைகள் அல்லவா? நாம் வாழ்வது வாழ்வா? அல்ல; அது சாவாகும். மெல்லின்ஸ் ஆகாரம் உண்டு, நமது குழந்தைகள் வளருகின்றன. ஜனத்தொகையும் அதிகரித்து வருகின்றது. உடல் உறுதி நமக்குக் குறைந்து வருவதில் வியப்பு ஒன்றுமேயில்லை. நமது பாட்டன்மார்கள் 70, 80 வருஷங்கள் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரின் சராசரி வயது 46; நம்முடைய சராசரியோ 23. ஏழ்மைத்தனமும் தொத்து நோய்களும் நமது இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு வருகின்றன.

## வாழ்வின் குறி.

ஆபத்து நமது கண்முன்னே நின்று உறுமுகையில், வாழ்க்கையின் போராட்டம் நெருக்கடி நிலைக்கு வந்திருக்கும்பொழுது, நமது வாழ்க்கை சிக்கற்பட்டு பின்னிக்கொண்டு கிடக்கையில் நாம் என்னசெய்து கொண்டிருக்கிறோம்? சோம்பலுடனும் சலனமும் இன்றி நாம் வாழ்ந்து வருகின்றோம். நம்மைச்சூழ்ந்து நிற்கும் சிக்கல்களைப்பற்றி, நாம் யோசிப்பதுமில்லை, நிலைமைக்த மாற்றுக்கண்டாலும், அதைப்பின்பற்றி நடக்க நமக்கு தைரியமும் ஜீவதாதுவும் இருப்பதில்லை. குமாஸ்தா வேலை பார்ப்பதும் எம். ஏ. பரீட்சை தேறுவதும் நமது வாழ்வின் நோக்கமாகி விட்டது. எம். ஏ. முதலிய பரீட்சைகளில் தேறினாலும், நமக்கு என்ன

கிடைக்கும்? ரூ. 100-க்குமேலில்லை. பி. ஏ.-க்கு 50 ரூ-க்கு மேல் கிடைக்காது. என்றாலும் ஒரு காலி உத்தியோகத்துக்கு 500 அபேட்சகர்கள் போட்டி போடுகிறார்கள் என்பதை நாம் மறக்கலாகாது. வாழ்வின் போராட்டத்துக்கு நமது புத்தகப் படிப்பு போதாது என்று பின்னர் தெரிந்துகொள்ளுகிறோம். "வக்கீலுக்கு"ப் படிக்காவிட்டால் வாழ்க்கை பயனற்றுவிட்டது என நம்மில் பலர் எண்ணுகின்றனர். என்றாலும், ஏற்கெனவே வக்கீல் தொழில் புரிபவர்களின் வருமானத்தையும் வாழ்வையும் நாம் அறிவதில்லை. கல்கத்தா சர்வகலாசாலைக்கு நான் தலைவனாகி, என்னிஷ்டப்படி செய்ய எனக்கு சக்தியிருந்தால் சட்டக் கல்லூரி கட்டடத்தை முதன் முதலாக இடித்துத் தள்ளிவிடுவேன். சட்டப்பரீட்சையை பத்து வருஷ காலமாவது ஒத்திப் போடுவேன்.

## "படிப்பற்ற" சில கனவான்கள்.

ஒவ்வொருவருக்கும் நல்லபடிப்பு வேண்டும். மற்றைய நாடுகளில் கல்வி பரவியிருப்பதைப் போல, இந்தியாவில் பரவவில்லை. பட்டங்கள் பெற்றால் மட்டும் நமது கல்வி பூர்த்தியாகிவிட்டதா? அந்நிய நாடுகளில், ஆரம்பப்பரீட்சை தேறிய பிறகு, ஏதாவது தொழிற்பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். ஆனால் நமது இளைஞர்களோ, பி. ஏ. தேறாவிட்டால் தங்கள் வாழ் நாள் பயனற்றுவிட்டதாக எண்ணுகிறார்கள். நம்மில் உண்மையான பெரியவர்களான கேசவசந்திரசேனா, பிரதாப மொஜூம்தார், காளி பிரஸன்ன கோஷ், சிசிர்குமார கோஷ், நளினிவிகாரிஸர்க்கார், ராஜேந்திரலால் மித்திரர்—இவர்களுக்கு ஸர்வ கலாசாலை சம்பந்தமே யில்லை. பி. ஏ. தேறினதும் ரவீந்திரர் வக்கீலுக்குப் படித்திருப்பாராகில் அவர் "கீதாஞ்சலி" நமக்கு அளித்திருப்பாரோ என்பது சந்தேகம். வியாபார உலகத்தில் பிரசித்தபெற்ற ஸர் ராஜேந்திரநாத் முகர்ஜிக்கு எத்தனைப் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள் உண்டு? ஒன்றுமேயில்லை. வியாபாரத்துக்கும் கைத்தொழிலுக்கும் வேண்டுவன தளர்விலா உழைப்பும் பிடிவாதமான உறுதியுமாகும்; தோல்வியில் மனந்தளரலாகாது. ஊதியம் இன்றி தொழில்கற்றுக்கொள்ள தன்மை வேண்டும். உறுதிகொண்டால், எவனும் வெற்றி பெறலாம். "செய் அல்லது சா" என்பதுதான் நமது சூத்திரமாயிருத்தல் வேண்டும்.

## தொழிலின் பெருமை.

கையால் வேலை செய்வதன் பெருமையை நாம் இன்னும் சரியாய் உணரவில்லை. இளைஞர்கள் தாங்கள் வாங்கும் சாமான்களை தாங்களே

தூக்கிச் செல்லுவதில்லை. அதற்கு "கூலிகள்" வேண்டுமாம். தாங்களே தூக்கிச் செல்லுவதா யிருந்தால் பொழுது போய் இருட்டு ஆகவேண்டும். தொழிலின் பெருமையை நாம் உணரவேண்டும். நாம் வியாபாரத்தில் பல துறைகளைக் காணவேண்டும். பிழைப்புக்கு புதிய வழிகளைத் தேடிக் கொண்டா லொழிய, இனி நாம் வாழ்வது முடியாது.

### இளைஞர்களுக்கு புத்திமதி.

பரீட்சைகளில் தேறாவிட்டால் ஏக்கம் கொள்ளாதீர்கள். பெற்றோர்கள் மனம் வருந்தி ஏக்கம் கொள்ள லாகாது. பரீட்சையில் தோற்றுப் போனதால் இளைஞர்களின் ஆண்மைத்தனம் போய்விட்டதா? அல்லது செல்வக் கதவு அடைபட்டு விட்டதா? வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால், ஸர்வ கலாசாலைப் பட்டம் தேவையே இல்லை. நான் கண்ட அனுபவத்தைக் கூறுகிறேன். ஆனால் படிப்பு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை, அறிவே வல்லமையாகும். சென்றபோரின் கொடுமைகள் ரஸாயன சாத்திரத்தின் பிறவிகளாகும். உண்மையான கல்வி வேண்டும்; வாழ்க்கைக்கு ஒவ்வாத படிப்பு வேண்டாம்.

### பரிதாப நிலை.

நமது நாட்டில் எங்கேனும் பொருட்காட்சி திறக்க நினைத்தால், அழும்படி நமக்குத் தோன்றுகிறது. பொருட் காட்சி சாமான்கள் அந்நியநாட்டுச் சாமான்கள். இருந்தாலும் பொருட்காட்சி தேவைதான்.

பொருட்காட்சியினால் நமது குறைகளைத் தெரிந்து கொள்ளுகிறோம் கல்லூரி தோற்றுப் போனால், "குடி முழுகி விட்டது" என்று நமது இளைஞர்கள் எண்ணவேண்டியதே யில்லை. எதிர்காலத்தைக் கண்டு அஞ்சாமல், எதிர்த்து நிற்கும் இளைஞர்கள் கூட்டம் வேண்டும். ஸாம்ராஜ்யங்களைப்படைத்த ஆக்பர், ஸிவாஜி, ராஞ்சித் சிம்மன், ஹைதர் அலி, கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்றவர்கள் ஸர்வ கலாசாலைப் பட்டங்கள் ஒன்றும் பெறவில்லை.

### குமாஸ்தா பிழைப்பு இனி வேண்டாம்.

குமாஸ்தா பிழைப்பு இனி நமக்கு வாழ்வின் வழி காட்டாது. இந்தப் பாதையை நாம் முறித்தெறிய வேண்டும். சுய உதவியை நாடிக் கருமம் செய்யவேண்டும். நான் இந்தியா முழுதும் சுற்றி யிருக்கிறேன். நாட்டிற்கு எனது எச்சரிக்கை இதுதான்:—"பௌதிக நூலும் கைத்தொழி

லும்" உத்தியோகங்களை இளைஞர்கள் நாடவேண்டாம். சுதேச கலைகளையும் தொழில்களையும் வளர்க்க வேண்டியது இளைஞர்களின் கடமையாகும்".

சகோதர சகோதரிகளே! இப்பெரியார் கூறியவற்றை யுணர்ந்து கைத்தொழில் வியாபாரம் விவசாயம் முதலிய துறைகளில் கற்றறிந்தோர் பிரவேசித்து அவற்றைப் பல வழிகளிலும் முன்னேற்ற மடையச் செய்வார்களாயின் நம் நாட்டைப் பீடிக்கும் வறுமை யொழியும். நம் நாட்டுச் செல்வவான்களுக்கே இவ்வுணர்ச்சி மிகவும் அவசியம். தற்காலக் கல்வியும் அடிமைத்தனத்திற் பிரவேசிப்பதற்கே சாதகமா யிருத்தலின் கல்வி முறையும் திருத்தப்படவேண்டும். முதலாவது இவ்வித உணர்ச்சியே நம்மவருக்கில்லை. 'மனமிருந்தா லன்றோ வழி யுண்டாகும்;' 'பாப்பாத்தியம்மா மாடு வந்தது பார்த்துக்கொள்' என்கிறபடி, உபேட்சையா யிருக்கும்வரை இந்நிலைமை மாறப் போவதில்லை.

பத்திரிகாசிரியர்.

---

## வேமன யோகியின் ஜீவிய சரித்திரமும் அவர் மொழிந்தருளிய பாடல்களும்.

பிரபஞ்சத்தில் மானிடப் பிறவியே உயர்ந்தது என்பதிவ் யாதொரு ஐயமுமில்லை. உலகில் யாவராலும் இது ஒப்புக்கொள்ளப்பட்டது. கடவுள் படைப்பில் அடங்கிய ஜீவராசிகளில் மனித வருக்கம் எக்காரணத்தால் உயர்ந்தது? மானிட ஜென்மம் இதர பிறப்புகளைக் காட்டிலும் எந்த விதத்தில் வித்யாசப்படுகிறது?

பகுத்தறிவு என்னும் விவேகம் மனிதனிடத்தில் மாத்திரந்தான் சிறந்து விளங்குகிறது. மனிதனிடத்தில் விளங்கும் இந்த விவேக ஞானமானது மற்ற ஜீவராசிகளிடத்தில் அவ்வளவு சிறப்பாக விளங்கவில்லை. செய்யத் தகுந்தவை எவை என்றும், செய்யத் தகாதவை எவை என்றும், தன் சுயநலம் எதுவென்றும், சுயநலம் அல்லாதது எதுவென்றும் அறிவதற்கான சக்தி மனிதன் ஒருவனுக்குத்தான் உண்டு.

சிரேஷ்டமான மானிடப்பிறப்பில் பிறந்து கடவுளுடைய கருணை கடாக்ஷத்தினால் நமக்குக் கிடைத்திருக்கிற விவேகக் கியானத்தை நாம் சரிவர உபயோகிக்காமல் இருப்பது நம்முடைய தன்மைக்கு ஏற்றதன்று.

மனித ஜன்மம் வாய்ப்பது அரிது, அரிது. அரிதான மானிட ஜென்மத்தை யடைந்து நம்முடைய விவேக ஞானத்தினால் 'நாம் ஏன் இப்புவியில் பிறந்தோம்? நம்முடைய ஜீவியத்தின் முடிவு யாது? நாளடைவில் அழிவை யடையும் வஸ்துக்களை நாம் நம்முடைய அஞ்ஞானத்தினால் போற்றுவது தர்மமா?' என்ற சிந்தனைகள் ஏன் நமக்கு இல்லை? அஞ்ஞானமாகிய சாகரத்தை ஞானமாகிய கப்பலினால் எப்பொழுது தாண்டுவோம். நம்முடைய சரீரம் அழிவற்றதெனக் கருதி, "கடவு ளுண்மையினையும் உயிருண்மையினையும் நினையாது உடலுண்மை யொன்றனையே கொண்டு, அதனை யோம்புவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று இறுமாந்து "அஞ்ஞானத்தால் இந்த அழிவுள்ள வுடலை மிகப் பற்றோடு போற்றுவது நன்றா? ஆத்ம விசாரத்தை மறப்பது நீதியா? சஞ்சலத்தைத் தருவதாகிய செல்வத்தை சாஸ்வதமாக நினைத்திருப்பவன் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவன்போல் ஆவான்.

குருபாததாசர் குமரேச சதகத்தில் "செல்வத்தின் நிலையாமையை"ப் பற்றி:—

ஓடமிடு மிடமது மணற்சுடும்; சுடுமிடமும்
    ஓடமிக வோடக்கும்
உற்றதோ ராற்றின்மடு மேடாகும்; மேடெலாம்
    உறுபுனல்கொண் மடுவா யிடும்;
நாடுகா டாகும், உயர் காடுநா டாகிவிடும்
    நவில்சகடு மேல்கீழதாம்;
நடையூறு சந்தைபல கூடும், உட னேகலையும்;
    நன்னிலவு மிருளாய் விடும்
நீடுபகல் போய்பின்பி ரவாகும்; இரவுபோய்
    நிறைபகற் போதாய் விடும்;
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
    நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடு, மனை, பாரி, சனம், மக்கள், நிதி, பூஷணமும்
    மருவுகன வாகு மன்றோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
    மலைமேவு குமரே சனே!" என்று அருளி யிருக்கிறார்.

இவ்வுலகின்கண் இந்து தேசத்தினர்களைப்போல வேறெத் தேசத்தினரும் ஆத்ம விசாரணையை அவ்வளவு தெளிவாயும் பூர்ணமாயும்

செய்யவில்லை. இது பாரதமாதாவின் பாக்கியமே! இத்திவ்ய ஆத்ம ஞானத்தையே விவேகாநந்த ஸ்வாமிகள் மேல்நாட்டார்களுக்கு உபதேசிக்கச் சென்றனர். ஆர்ய வர்த்த புண்ணிய பூமியாகிய நம் இந்தியாவில் ஆதிகாலத்திலிருந்து பெரிய ரிஷீஸ்வரர்கள் ஆத்ம தத்துவத்தில் அவர்களுடைய பூர்ணமான அவாவை வைத்து இரவும் பகலும் அதே சிந்தனையாய் வேறு கவலை அற்று ஆராய்ந்தனர். இதைக் குறித்தே மிகவும் கொரோமான தபம் செய்தனர்.

வேதங்களையும், இதிகாசங்களையும், புராணங்களையும், நாம் சரிவரப் படிப்போமாகில் எவ்விதம் மனிதன் ஆத்ம ஞானத்திற்காக அமைதியான திடத்துடனும் மனோ தைரியத்துடனும் கைவிடாது முயன்று முடிவில் பகவானோடு ஐக்கியத்தை அடைகிறான் என்பது தெளிவாய் விளங்கும். ஜீவாத்மா பரமாத்மாவின் ஸாந்நித்தியத்தை அடைந்து எகோபித்து ஜோதிர் மயமாய் விளங்கும் பிரபாவத்தை இவைகள் மிகவும் தெளிவாகக் கூறுகின்றன.

பகவத் சாந்நித்தியத்தை அடைவதற்கு மாயா அவஸ்தைகளின் பற்றை அற ஒழிப்பதே அத்யாவசியம். இந்த வியவஸ்தைகளில் பற்று இருக்குமாகில் பகவத் ஐக்கியத்தின் பொருட்டு எவ்வளவு முயன்றாலும் சாத்தியமாகாது. உலக வாசனையை வேரோடு ஒழித்து ஜீவிய நோக்கமாகிய பகவத் ஐக்கியத்தை அடைய முயலுவதே நம் சுயநலம். இதை நாம் மறப்பது எள்ளளவேனும் நமக்கு நன்றி தராது. பகவானோடு ஒன்று சேர்வதற்கே நமக்கு இம்மானிடப் பிறப்பு வாய்த்திருக்கிறது. இதை நாம் நினைத்துப் பகவத் கடாக்ஷமும், ஐக்கியமும் அடைய முயலுவது நமது கடமையாகும். அழிவடையும் அநித்யமான மாயா வஸ்துக்களாகிய மண், பெண், பொன் ஆசைகளில் உழன்று மெய்ஞ் ஞானத்தை மறப்பதில் பயன் யாதும் கிடையாது. இச் சிற்றின்பங்களினால் நமக்கு முடிவற்ற துன்பங்கள் வாய்க்கின்றன. சாஸ்வதமான பேரின்பத்தை மறக்கச்செய்யும் இச் சிற்றின்பங்களின் பற்றை அகற்றி ஜீவிய நோக்கமாகிய பகவத் ஐக்கியத்திற்கு முயலுவதே நம் பெரும் கடமையாம்.

உலகப் பற்றை அகற்றி நம் ஜீவியத்தில் பகவதைக்கிய சித்தியடைந்த சித்த புருஷர்களின் ஜீவிய சரித்திரங்களைப் படிப்பதும், அவர்களுக்குத் தொண்டு செய்வதும் நம்முடைய அஞ்ஞானம் போவதற்கு ஏற்ற சாதனமாகும். சேர்க்கை வாசனையினால் மனிதன் மிகவும் மாறுதல் அடைகிறான். ஆகையினால் புஷ்பத்தினுடைய சேர்க்கையினால் கேவலமான நூலும் மேன்மை யடைதல் போல, பகவத் பக்தர்களுடைய ஜீவிய

சரித்திரத்தைப் படிப்பதினாலும் அவர்களுக்குக் கைங்கரியம் செய்வதினாலும் அவர்கள் காட்டிய வழியைக் கைவிடாது அனுசரிப்பதினாலும் அழிவற்ற சாஸ்வத சுகமாகிய ப்ரஹ்மாநந்தத்தை (முக்தியை) அடைகிறோம். இக பர சௌக்கியத்தைப் பெறுகிறோம்.

இந்தியாவின்கண் தோன்றிய யோகீஸ்வரர்களில் 'வேமன' ரென்பவர் ஒருவர் மஹா யோகீஸ் வரராயும், தெலுங்கு பாஷையில் வரகவியாயும் விளங்கி உலக நன்மையின் பொருட்டு அஞ்ஞான இருளில் திகைக்கும் மானிடர்களுக்கு ஞான ஒளி காண்பித்து அவர்கள் பேரின்ப சுகத்தை உணர வழி காட்டியவர். அந்த மகானுடைய ஜீவிய சரித்திரத்தையும் அவர் திருவாக்கின் அமிருதத்தையும் தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டு தமிழில் எழுத முயன்றேன். கல்வித் தேர்ச்சியிலும் வயதிலும் சிறியேனாகிய யான் எடுத்துக்கொண்ட இப்பெருங்காரியத்தில் பிழைநேரின் அதைச் சிறியோன் பிழை எனப் பாவித்து மன்னித்து ஹம்சபக்ஷியானது பாலைப் புசித்து நீரை அகற்றி விடுகிறது போல, சார பூதமாகிய நல்விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளுமாறு மிகவும் வணக்கமாய்ப் பிரார்த்திக்கின்றேன். (தொடரும்.)

வி. ஸி. இராமசுவாமி ஐயர்,
உபாத்தியாயர், முனிஸிபல் ஹை ஸ்கூல்,
வாலாஜாபேட்டை.

---

## கல்விக் குறிப்புகள்.

### மனோசக்தி யளவையும் குண அளவையும்.

### (MENTAL AND CHARACTER TESTS.)

நாகரீகம் முதிர்ச்சி அடைய அடைய நவீன ஆராய்ச்சிகளும் கற்பிதங்களும் அறிவு முதிர்ந்த பெரியோர்களின் முயற்சியால் வெளிவருகின்றன. அவைகள் கட்புலனாகக் காணக்கிடைக்கும் காட்சிகளைப் பற்றிய சடத்துவ சாஸ்திர (Physical Sciences) ங்களின் அளவில் நில்லாது மனோதத்துவ சாஸ்திரத்தையும் பற்றி நிற்கின்றன. சடத்துவ

ரசாயன சாஸ்திரிகள் பொருட்களின் தத்துவாம்சங்களைக் கண்டு பிடிப்பதுபோல மனோதத்துவ சாஸ்திரிகள் மானுடரின் அறிவையும் மனோசக்தியையும் வெகு சுலபமாய் அளந்தறிகிறார்கள்.

தற்போது அமெரிக்காவில் மனோதத்வக் கழகம் ஒன்றிருக்கின்றது. அதன் கிளைகள் நாட்டின் பலபாகங்களிலும் ஐம்பது போல அமைந்துள்ளன. அவைகளுக் கெல்லாம் தலைவர் டாக்டர் மக்கீன் கேட்டல் (Dr. J. Mc Keen Cattell) என்ற மனோதத்துவ நிபுணர் ஒருவர். அமெரிக்காவிலுள்ள முதன்மையான சர்வ கலாசாலைகளினின்றும் இருபது முதல்தர மனோதத்துவ நிபுணர்கள் மேற்கண்ட டாக்டருக்கு உதவிசெய்ய முன்வந்து இலவசமாகவே ஊழியஞ் செய்து வருகின்றார்கள்.

இவர்களது நோக்கம் என்னவெனில் ஜன சமூகத்தாரைச் சந்தோஷ சம்பந்நராக்குவதே. அது எங்ஙனமெனில், நமது மனோசத்தி இன்னது, நாம் இன்ன தொழிலுக்கேற்றவர், என்பதை அவர்கள் வெகு சுலபமாயும் திட்டமாயும் வரையறுக்கின்றார்கள். ஆகவே, நாம் நமது மனோசக்திக்கும் பாங்கிற்கும் ஏற்பதொரு தொழிலைக் கடைப்பிடித்து சந்தோஷ முறவும், இயற்கையான வாசஸ்தலமாகிய நீரை விட்டுக் கரையில் கிடக்கும் மீனைப்போலன்றி, தமது இயற்கை இயல்புக் கேற்பத் தமது தொழிலை நடத்தவும் செய்து, மானுட வாழ்க்கையின் சுகிர்தத்தை மேம்படுத்துகின்றார்கள்.

பள்ளிக்கூடப் படிப்பை முடித்து கல்லூரியில் உயர்தரப் படிப்பை நாடிச்செல்லும் யௌவன மாணவர்களுக்கு இவ்வித மனோ அளவை வெகுவான நன்மையைப் பயப்பதாகும். எவ்விதமெனில், அவர்களது வருங்கால வாழ்க்கைநலம், பொருளினாலும், எதிர்பாராத சில சந்தர்ப்பங்களினாலும் ஆக்கப்பட நேரினும் இன்ன இலாகாவில்தான் இவனது யோக்கியதாம்சங்கள் இவனுக்கு ஊன்றுகோல்போலிருக்கு மென்பதையே நாம் முக்கியமாய் சிந்திக்கவேண்டும். இவைகளை வெகு எளிதாய் ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திய பரிசீலனையினால் மனோதத்வ நிபுணர்கள் ஸ்திரமாயும் திருத்தமாயும் வரையறுத்துவிடுகின்றார்கள்,

மேலும், மனோதத்துவ சாஸ்திரம் உலகவாழ்க்கையில் ஒவ்வொரு தரப்பிலும் பயனைத் தருவதாகும். உதாரணமாய் தாய் தந்தையர், இரு குழந்தைகளடங்கிய ஒரு குடும்பத்தை யெடுத்துக் கொள்வோம். தகப்

பன் ஒருகடையில் கணக்கனு யிருக்கின்றான். ஆனால், அவனுக்கு கூட்டல் கழித்தலில் விசேஷ பற்றுதலில்லாது கணக்கென்றால் காததூரம் ஓடுபவனு யிருக்கின்றான். எனினும், ஜனசமூகத்தில் கூடி பழகி உழைக்கும் இயல்பினன். அவன் ஒருதொழிலை மேற்கொள்ளுமுன், அவன்பால் மனேசக்தி யளவையை மனேதத்துவ சாஸ்திரோக்தமாய் பிரயோகப் படுத்தி யிருப்பின், அவன் கணக்கனுக சேர்ந்திருக்கவே மாட்டான். தன் சுபாவத்திற் கேற்ப ரயில்வே கம்பெனியில் டிக்கட்டு பரிசோதிப்பவனுகவோ அல்லது பிளாட்பாரம் போர்மனுகவோ ஜனங்களின் மத்தியில் ஊசலாடி உலவும் உத்தியோகஸ்தனு யமர்ந்திருப்பான். இதுநிற்க,

அவனது பெண் எட்டு வயதுள்ள அழகிய அலமேலுவை எடுத்துக்கொள்வோம். அடுத்தவீட்டு அம்புஜம் ஆர்மோனியம் வாசிப்பதைக் கேட்கச் சகிக்காத அன்னை அலமேலுவும் ஆர்மோனியத்தில் தேர்ச்சி பெற விரும்பி பணச்செலவிட்டு ஓர் ஆர்மோனியத்தை வாங்கிப் பாங்குடன் ஒரு உபாத்தியாயரையும் அமைக்கிறாள். ஆனால் ஆர்மோனியத்தில் அலமேலுவுக்கு அணுவளவும் அபீஷ்டமில்லை. ஆகவே, அவளிடம் காணக்கிடைக்காத ஒரு அம்சத்தை விர்த்தி செய்ய அளவுபடாத பணத்தை அள்ளித் தெளிக்கிறார்கள்.

அவ்விதமே எஞ்ஜின்கள் ஆயுதங்கள் முதலியவைகளின் அம்சங்களேயும் தத்துவங்களேயும் ஆராயுந் தன்மையுள்ள ஆராவமுதனை லாயர் வேலைக்குப் படிக்கத் திட்டஞ் செய்கிறார்கள். பையன் தன் மனதின் இயல்பிற் கொவ்வாத சட்ட திட்டங்களைப் பொறுமையுடன் படித்துப் பாஸ் செய்துவிடுகிறான். ஆனால் நியாயஸ்தலத்தில் வாதிக்கவழி தெரியாமல் திகைத்து திண்டாடுகிறான்.

ஆகவே, மேற்கண்ட குடும்ப வாழ்க்கை நிர்ணயத்தில் மனேதத்துவ சாஸ்திரி யொருவரது உதவியை நாடி அவரது சாஸ்திரப் பிரமாணத்தின் வாயிற்பட்ட ஆலோசனையை அனுசரித்து நடந்திருந்தால் தகப்பன் புகைவண்டிச் சாலையிலும், ஆராவமுதன் தொழிற்சாலையிலும், அலமேலு தையல் வேலையிலும் அவரவரது மனேபாவத்திற் கேற்ப அமர்ந்து தொழில்களைத் தக்கவாறு நடத்தி சந்தோஷமுற் றிருப்பார்கள்.

ஆகவே அவரவரது போக்கிற்கும் சக்திக்கும் ஏற்றவாறு தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக் கேற்ற தொழில் சம்பந்தமான பயிற்சி

பெறுவரேல் ஒவ்வொருவரும் சாதாரணமாகச் சம்பாதிக்கும் பொருளைக் காட்டிலும் பன்மடங்கு சம்பாதித்து அனுபவிக்கத் தக்க ஆற்றலைப் படைக்கப் பெறுபவராவர்.

வியாசத்தின் ஆரம்பத்தில் கண்ட கழகம் வியாபாரச் சாலைகளிலிருக்கும் குமாஸ்தாக்களின் அறிவை யறிவதிலும், தொழில், வியாபாரம் முதலிய சாலைகளில் உழைக்கப் பொறுப்பும் யோக்கியதையும் வாய்ந்த உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் வெகுவான சிரத்தை காட்டி வருகின்றது. அத்தகைய முயற்சியின் முடிவு என்னவெனில் வேலைக்கு அபாத்திரரை நீக்கவும், தத்தமக் கேற்ற வேலை யில்லாதவரை அவரவர்க்கு கிரமமான ஸ்தானத்தில் வைக்கவும், விசேஷ அறிவு கூர்மையும் சுறுசுறுப்பும் படைக்கப் பெற்றவர்களை அவரிருக்கவேண்டிய உயர்பதவிகளில் உய்க்கவுமாக சீர்படுத்தி, வேலைசெய்யும் உத்தியோகஸ்தரின் சுகபோகத்தை உயர்த்தியும், அவர்களை நியமிப்பவரின் நலங்களைப் பன்மடங்கு பாவித்தும், செட்டும் செல்வமும் சந்தோஷமும் ஒருங்கே குடியிருக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இவர்களது அளவை சரியா என அறிவது கஷ்டசாத்தியமல்ல. உத்தியோகங்களில் உண்மையாக யோக்கியதை படைத்தவரென யாவருக்கும் ஒப்பமுடிந்தவர் இவர்களது அளவையில் முதன்மையான ஸ்தானத்தை வகித்திருக்கின்றார்கள். ஆகவே, அறிமுகமில்லாத அநேகருடைய அறிவை வரையறுப்பதிலும் அவ்வித அளவை அனுகூலத்தைத் தருமென்பதே அவரது துணிபு.

மனிதனது சக்தியை யளந்தறிவதை விட சாத்தியமான காரியமாகிய மனிதனது நடத்தை, குணகுணங்கள், மனோபாவம் ஆகிய இவை சேர்ந்த மனிதனது ஒழுக்கத்தையும் அளந்தறிய மனோதத்துவ நிபுணர்கள் முன்வந் திருக்கின்றார்கள். மனிதனது மனோசக்தியைப் போல் குணத்தையும் சிறிதும் தவறின்றி நிர்ணயிப்பது சாத்தியமல்ல. ஏனெனின், மனிதன் இஷ்ட சக்தி வாய்ந்தவனா யிருப்பதல்லாமல் வெவ்வேறு இலாக்காக்களில் வெவ்வேறு வகைப்பட்ட நடத்தையுடையவனாயு மிருக்கின்றான். உதாரணமாக, வியாபார ஸ்தலத்தில் ஒருவன் விசேஷ உண்மை, நம்பிக்கை, பெருந்தன்மை, முகமலர்ச்சி முதலிய குணங்களை வெளிக்காட்டும் இயல்பினனாகக் காணப்படுகின்றான். வீடு திரும்பியதும் அதே மனிதன் தனது குடும்ப ஸ்தலத்தில் கோபாவேசம், நம்பிக்கைத் துரோகம், பாரபக்ஷம், அன்பின்மை முதலிய குணக் கேடுகளுக்குக் கழகம்போன் றிருக்கின்றான். அதுபோலவே, குடும்பத்தில் தனது

இல்லான் மக்கள் முதலியோரிடத்து வெகுவான வாஞ்சையும் உண்மையு முள்ள ஒருவன் தனது வியாபார ஸ்தலத்தில் அப்பேறுகளைக் காட்டா தொழிந்து வெகு தந்திரசாலியாயும் பணமென்றால் குணத்தையும் விடுக்க விரும்பும் வீணனாயு மிருக்கக் காணலாம்.

ஆகவே மனோதத்துவ நிபுணரது நோக்கம் என்னவெனில் ஏறக்குறைய ஒரு மனிதன் உத்தியோக தோரணையிலோ மற்று மேதேனும் தொழிலிலோ தன்னை நியமிக்கும் எஜமானனுக்கு எவ்வளவில் உண்மையுள்ளவனாகவும், அவனது நம்பிக்கைக்கு பாத்திரனாகவும், நற்குணனாகவும் இருக்க வல்லன் என்பதைத் திட்டஞ் செய்வதே.

உதாரணமாக, அமெரிக்காவில் மேற்கண்ட கழகத்தார் ஒரு சமயம் ஒருபெருங் கம்பெனியில் வேலையி லமர வந்த சில பையன்களின் நாணய யோக்கியதாம்சங்களைப் பரீட்சித்து தெரிந்தெடுக்க நேர்ந்தது. ஒவ்வொரு பையனிடத்திலும் ஒவ்வொரு டாலர் (அமெரிக்க நாணயம்) கொடுத்து அருகிலிருந்த ஒரு மருந்துக் கடையில் சில்லறை மாற்றி வரும்படி ஏவினார்கள். மருந்து வியாபாரிக்கும் இவ்விஷயமாய் எச்சரிக்கை செய்து அப்பையன்களிடம் ஒரு டாலருக்கு அதிகப்பட்ட சில்லறையைக் கொடுக்கும்படி முன்னதாகத் தெரிவித்திருந்தார்கள். ஒவ்வொரு பையனும் சில்லறையைப் பெற்றபோது திடுக்கிட நேரும். அவன் அச்சமயம் எவ்விதம் நடந்துகொள்ளுகிறானோ அது அவனது யோக்கியதையை வெள்ளிடை மலைபோல் விளக்கிவிடுமென்றோ? ஒவ்வொருவனும் தான்செய்யக்கூடியவை மூன்றுண்டு: அதிகமாய் தரப்பட்ட சில்லறையை மருந்து வியாபாரியினிடமே திரும்பவும் கொடுத்துவிடுவதொன்று; அல்லது தனது எஜமானனிடம் கொணர்ந்து கொடுத்துவிடுவது இரண்டாவது; அல்லது அதிகப்பட்ட சில்லறையைத் தானே எடுத்துக்கொண்டு விடுவது மூன்றாவது. அதிகமான சில்லஸறயை அவன் காணவிட்டால் என்றாலோ பையன் சாமர்த்திய சாலி யல்ல என்பது தெளிவாகின்றது. இப் பரிட்சையில் அநேகமாய் எல்லாப் பையன்களும் அதிகமாயிருந்த சில்லறையை மருந்து வியாபாரியினிடமே கொடுத்துவிட்டார்கள்.

மற்றொருமுறை, உபாத்தியாயரது உண்மை நாணயாம்சங்களை அவர்கள் கண்டறிய நேர்ந்தது. அதன் முடிவாக மூன்றிலொரு பாலார் தாம் நன்மதிப்பைப் பெறவேண்டுமென்ற ஆவல் மிகுந்தோராய் மிகைபடக் கூறல் என்ற குற்றத்தி லகப்பட்டார்கள். அது எங்ஙனமெனில் பலவேறுபட்ட புத்தகங்களின் பெயர்களை யெல்லாம் வரிசையாய் எழுதி,

அவற்றில் தாங்கள் படித்தறிந்த புத்தகங்களின் பெயர்களை மட்டும் குறிக்கும்படி ஆசிரிய வர்க்கத்தினரை கழகத்தார் வேண்டினர். ஆனால் ஜாபிதாவில் உண்மையில் வெளிவராத பல புஸ்தகங்களையும் பரீட்சகர் சேர்த்தெழுதி யிருந்தனர். உபாத்திமார் தமது கல்வியறிவை வெளிக்காட்ட ஆவலுள்ளவராய். பொய்ப் புத்தகங்கள் பலவற்றையும் குறித்து வீண் புகழை நிலைநாட்ட முயன்றார்கள்.

குணசீல அளவைத் தராப்பில் மனோதத்வ நிபுணர்களின் ஆராய்ச்சி சமீபகாலம் தொட்டதே. ஆகலின் அவர்களது ஆராய்ச்சி பெருவாய் அநுமானப் பிரமாணத்தைப் பற்றியதாகவே இதுவரையி லிருந்து வந்திருக்கின்றது. ஆகவே இனி தமது அனுபவ முதிர்ச்சியின் பயனாய் மனிதரது குணாகுணங்களையும் ஒழுக்கப் போக்கையும் நிர்ணயமாய் வரையறுக்க இடமுண்டு.

ஏ. சௌரிராஜுலு நாயுடு, பி. ஏ., எல். டி.

---

## புருஷார்த்தம்.

(49-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒரு நாட்டுக்கு முக்கிய ஜீவனாதாரமாயிருப்பவை (1) வியவசாயம் (பயிரிடல்), (2) வர்த்தகம், (3) கைத்தொழில்கள் ஆகிய மூன்றுமாம். நம் இந்தியநாடு பொருளாதார நிலையில் மேம்படவேண்டுமாயின் இந்திய மக்கள் இம்மூன்று துறைகளிலும் தம் கல்வியையும், செல்வத்தையும் இன்னே செலுத்துதல்வேண்டும். நாம் இப்பொழுது நமது வியாபாரத்தையும் கைத்தொழிலையும் வெளிநாட்டார் வசத்து ஒப்புவித்து விட்டிருக்கிறோம். நம்வீட்டின் எந்தமூலையிலும் பிறநாட்டில் தொழிற் படுத்தப்பட்ட சாமான்களே காணப்படுகின்றன. நம் நாட்டில் உற்பத்தியான சாமான்களும் பிறநாடு சென்று தொழிற் படுத்தப்பட்டுவந்து நம் நாட்டில் விலையாகின்றன. அந்தோ! நம் உயிருக்கு ஆதாரமான பொருளாதார நிலையை அந்தரத்தில் அல்லாடவிட்டு இச்சாமான்களை நம்வீடுகளில் நிரப்பிக்கொண்டோம். நாம் ஒவ்வொருவரும் வறுமையின்றி வாழவேண்டுமாயின் நம்நாடு வறுமை யுறாதபடி நாம் காக்கவேண்டும். தமிழபிமானிகள் வடமொழியிலுள்ள அர்த்த சாஸ்திரங்களை மொழி பெயர்க்க முயற்சித்தல் வேண்டும். பலர்கூடிக் காப்பிகுடித்தல், பந்தாடல்,

நாடகமாடல், சீட்டாடல் முதலிய இழிந்த நோக்கங்களையே கொண்டுள்ள இளைஞர் சங்கங்கள் பலவும் தமிழாராய்ச்சி, அறநூல், பொருணூல், சமயநூல், பௌதிகநூல் (Science) முதலிய ஆராய்ச்சி, தேசியப்பொதுநல ஆராய்ச்சி, சிலம்பம்பழகல் முதலிய உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருந்தால் தேசத்துக்கு நன்மை பயப்பதாம்.

## 3. இன்பம்.

ஈண்டுக் கூறப்படுமின்பம் மனம் இந்திரியங்களின் வழி சென்று விஷயங்களோடு கூடிய வழி உண்டாகும் விஷயானந்தமாம். விஷயங்களாவன: பொறிகளால் நுகரப்படுவனவாய ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமென்னும் ஐந்துமாம். இவற்றை வடநூலார் முறையே சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ப. இவ்வைந்து விஷயங்களையும் ஐந்திந்திரியங்களாலும் உணரும் உணர்வேபோகமும், அப்போகத்தால் மனதில் தோன்றும் கிளர்ச்சியே இன்பமுமாம். எல்லா உயிர்களாலும் காமிக்கப்படுவது (விரும்பப்படுவது) ஆதலின் வடநூலார் இன்பத்தைக் காமமென்னும் பதத்தினால் வழங்குவர். இவ் வைவகையான இன்பங்களும் மகளிர்மாட்டும் ஒருங்கேஅனுபவிக்கப்படுதலினாலும் அவ்வின்பமே இலௌகிக இன்பங்களிற்றலை சிறந்து விளங்குதலினாலும் "தன்னால் மணந்து கொள்ளப்பட்ட அன்புள்ள மனைவியோடு மனமொருமித்துக் கூடி அநுபவிப்பது இன்பம்" என்னும் பொருள்பட 'காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே யின்பம்" என்றார் ஔவையார். பொதுமகளிர் பொருள்மேல் நோக்கமுடையராதலினாலும் அவர் நேசம் பலநோய்களுக்கும் அவமானத்துக்கும் காரணமாதலினாலும் அவர் மாட்டுச் சேர்தலையும், பிறர்காணிற்பழியும் அகப்பட்டுக் கொண்டால் தண்டனையும் துய்க்கும்போதும் அச்சமும் தருதலால் பிறர்மனைவியர்பாற் சேர்தலையும் நீக்குதற்பொருட்டு "மணந்து கொள்ளப்பட்ட மனைவி" என்றும். அம்மனைவியும் மாசிலாக் குலத்துதித்து, வருவிருந்துவப்ப ஊட்டி, வருவாய்க்குத் தக்க செலவுசெய்து, கொண்டானைப்பேணி, அவன்சொற் கடவாது நடக்கும் சுந்தர குணங்களையுடையவளாயிருத்தல் வேண்டும். மனைவி செம்மையிலளாயின் அவளிருந்த வீடு சுடுகாடொக்கும்; அவளைக்கொண்ட புருடன் பேய் கொண்டானொப்பன்.

திருந்திய புலமைத்திருவள்ளுவர் மனைவியர்க்கு "வாழ்க்கைத் துணை" என்னும் பெயர்தந்து சிறப்பித்தனர். நன்மனைவியைப் பெற்றிருந்த அவர் தம் மனைவி இறந்தபோது:

அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின் றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என் றூங்கும் என்கண் இரா.

என்று பாடித் துக்கித்தனராம். வாசுகி என்னும் அபிதானமுடைய அப்புண்ணியவதி திருவள்ளுவர் பழைது சுடுகின்ற தென்றால் விசிறி கொண்டு வீசுவர். பகல் வெளிச்சத்தில் விழுந்த நூனுழியைத் தேட விளக்கேற்று என்றால் உடனே தீபங்கொணர்வர். மனைவியர் கணவருக் கினியராய் ஒழுங்காக நடந்து கொள்ளாமைக்குக் காரணம் பெற்றோரும் கணவரும் அவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பியாமையாம்.

இல்வாழ்க்கையை நடத்தும் புருடர் மனைவியரை மரியாதையாக நடத்துதல் வேண்டும். மனைவியர் இயந்திரங்களல்லர்; மனவுணர்வுடைய மகளிராவர். புருடன் மனைவிகருக் குருவாவன். அவளுக்குத் தெரிய வேண்டிய பலவிஷயங்களையும் ஒழுக்கங்களையும் இவன் கற்பித்தல் வேண்டும். புருடன் கற்பித்தபடி ஒழுகுதலே மனைவியர்மாட்டு அவசியம் இருக்கத் தக்கதாகச் சொல்லப்படும் கற்பாம். இது "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் ஔவை வாக்கா லுணரப்படும்.

(தொடரும்.)

சா. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

## ஔவை அனுபவங்கள்.

[*Copyright by the Author.*]

களங்கமற்ற இருடிகள் மனத்தில் ஞானவொளி பிரகாசிப்பதைப் போல, மேகமேயில்லாத ஆகாசத்தில் ஆதித்தன் தன் பூரண ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

பகல் மணி பன்னிரண்டு சுமாருக்கு, இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் மணல் அனல் போலக் கொதித்துக் கொண் டிருக்கும் அத்தருணத்தில் ஒரு கிழவியார், தத்தித் தள்ளாடி நடந்து வந்து, ஒரு மாடிவீட்டின் வாயிற்படியைக் கிட்டினர். முகத்திலும் மார் பிலும் வழிந்து கொண்டிருந்த வியர்வை நீரைத் துடைத்துக் கொண்டார்.

'அம்மாடி!' என்று சொல்லிக்கொண்டே அவ்வீட்டின் தெருத்திண்ணையி லமர்ந்தார். புடவையின் தலைப்பை இரு கரங்களினாலும் பிடித்து விசிறிக் கொண்டார். கொஞ்சம் சிரமபரிகாரம் செய்து கொண்டதும், தன் தாகவிடாயையுந் தணித்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன், 'அம்மா!' என்றழைத்துக்கொண்டே, சாத்தப்பட்டிருந்த தெருக்கதவைத் தட்டினார்.

மறு நிமிஷத்தில் கதவு திறக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்ட தைக்கண்ட கிழவியின் கண்கள் கதவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பெண்மணியையும் பார்க்க மறக்கவில்லை.

அப்பெண்மணி செந்தாமரைப்போல் சிவந்தாவது, இல்லாவிட் டால் ரோஜா புஷ்பத்தைப்போல், சிவப்பும் வெளுப்பும் கலந்த நிறமா யாவது இல்லை. ஆனால், இந்திய நாகரீகம் அடைந்த தேசாபிமானிகள் காண ஆசைப்படும் ரோஜாவர்ணமும் சிவப்பும் கலந்த வர்ணமாயிருந்தது. அவ் வர்ணத்தின் மேல் மஞ்சளும் கொஞ்சம் பூசப்பட்டிருந்திருப்பின் இன்னும் எவ்வளவோ வசீகரமாய் இருந்திருக்கும்.

'எங்கேயாவது, தப்பித்தவறிக் கொஞ்சம் அதிகவர்ணம் விழுந்து விடுமோவென்னவே என்று பயந்து எந்தச் சிறந்த ஓவியக்காரனும் எழுதத் தைரியம் அற்றிருந்தான்'—என்று சொல்லும்படியாக அவ்வளவு வனப்பு வாய்ந்த வனிதையின் சுருட்டை மயிரையும் கருணையும் அன்பும் ஒழுகும் கண்விழிகளையும், நீண்டுருண்டு திரண்ட கைகளையும், சாதாரண உயரத்திற்கு மேற்பட்டிருக்காத உயரத்தையும் பார்த்த பாட்டியார், நேத்திரானந்தமுற்று, "அம்மணீ! தாகம் தபிக்கின்றது; கூடுமானால், தயவுகூர்ந்து சிறிது தண்ணீர் தாரும்!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

உடனே அப்பெண்கள் நாயகம் பாட்டியைப் பார்த்து, "பாட்டி! அதற்கென்ன சந்தேகம்? ஒவ்வொருவர் ஆயிரம், ஆயிரமாகச் செலவு செய்து எத்தனையோ தர்மங்களியற்றி வருகிறார்கள் என்பது தங்களுக் குத்தெரியாத புதுவிஷயமல்ல; அவ்வாறிருக்க இச்சிறு உபகாரத்தைக் கூடச் செய்யமாட்டேனா? வாருங்கள் உள்ளே!" என்று புகன்று, அம்மை யாரை இல்லத்தினுள்ளே அழைத்துப்போய், ஊஞ்சல் ஒன்றிலமர்த்தி, அவருடைய தாகத்தைத் தணித்தாள்.

அப்போது, அனுபவ சாஸ்திரத்தில் அதிகப்புலமை பெற்ற அப் பாட்டியார் அக்கட்டழகியைப் பார்த்து, "தோழீ! நீ இப்பொழுதியற்றிய நன்றி எவ்வளவோ சிறியதாகத் தோன்றுகின்றதனக்கு; என்னைக் கேட் டால், காலத்தில் செய்த நன்றி, எத்துணை சிறியதாயிருப்பினும் அது

பூமியைக் காட்டிலும் மிகமிகப் பெரியது, என்று புகலுவேன்; பொய்யா மொழிப் புலவரும் இதையே "காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது." என்று கூறியிருக்கிருர்.

அதகிடக்கட்டும்! குழந்தாய்! நான் முதன்முதலிற் கண்டகாலே உன்னைக் கேட்கக் கருதினேன். அழகிற் கிருப்பிடமான உன்முகம் பிரகாசமற்றிருக்கின்றது. பச்சைப் பசக பசுமஞ்சள் பூசப்பட்டதாகவே தோன்றவில்லை. உன் துப்பைபோன்ற உடம்போ இளைத்துக் கன்னங்கள் வெண்மையுற்றிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? உற்று நோக்குமிடத்து, உன் மனத்தை உட்புழு ஒன்று அரித்து வருவதாகத் தோன்றுகின்றது. அவ்வுட்டழு என்ன வென்று எனக்குச் சொல்லலாகாதா? உன்னுடைய குழந்தைகள் எங்கே? உன் கழுத்தில் உள்ள மஞ்சள் கயிற்றைக் கட்டிய மணுளன் எங்கே?" என்று விஞவினர்.

அதைக் கேட்ட அம்மடமங்கை; "அம்மணீ!" என்று எதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனல் துக்கம் வந்தடைத்ததால் ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்க முடியாமல் அவதியுற்ருள். ஆயினும், பாட்டியார் பண்ணின சமாதானத்திஞல் கொஞ்சம் தேறுதலுற்று, "பாட்டி! தம்மைப்பார்த்தால் பரதேவதைபோலத் தோன்றுகின்றது. உங்களைப் போன்ற பெரியவாகளிடம் புகன்று கொண்டால் எங்களுக்குக் கொஞ்சம் ஆறுதல் உண்டாகின்றது.

"நான் இருபதுக் தராயணங்களைக் கண்டவள். எனக்கும், இவ் விடுதிக்கும், இதிலுள்ள சாமான்களுக்கும் சொந்தக்காரர், என்னுடைய பதின்மூன்ருவது பிராயத்தில் எனக்குப் பதியாஞர். ஒரு வருஷகாலம் நானும் அவரும் பூவும்-மணமும் போலும், நகமும்-சதையும் போலும், மணியும்-அதன் நாதமும் போலும், உடலும்-உயிரும் போலும் ஒன்ருக வாழ்ந்து வந்தோம். எங்களுடைய இன்பமான வாழ்க்கையில் பொருமை கொண்டு, பகவான், இச்சோணுட்டரசருக்கும் கூடல் வழுதிக்கும் சண்டையை உண்டாக்கிஞர். அரசாக்ஞையிஞல் போர்முகம் போன என் புருஷர் இன்னும் திரும்பிலர். அவரில்லாமல் எனக்கு என்ன சுகமும் சந்தோஷமும் வேண்டியிருக்கின்றன. எண்சாணுடம்பிற்குச் சிரசு பிரதானமா யிருப்பது போல, குடும்பத்திற்குக் கணவரல்லவோ பிரதானம். உண்ணல், பூச்சூடல், நெஞ்சுவத்தல், ஒப்பனை பண்ணல் எல்லாம் அவர்பார்க்கவன்ருே? அன்னவரைப் பிரிந்திருக்கிற நான் என்ன சுகம் விரும்புவேன். தெய்வமாம் தெய்வம்! ஆளிருந்தும் ஆளில்லாமங்கை போலென்னை யாக்கியிருக்கின்ற அந்தத் தெய்வத்தை, எல்லாரையும் போலவே 'கருணுநிதி' என்றும் 'தீனரக்ஷகன்' என்றும்

சொல்ல என் நா கூசுகின்றது. நான் படும் பாடுகளையெல்லாம் பார்த்தும் சும்மா இருக்கின்ற, பாழாய்ப்போகின்ற அத்தெய்வம் இருந்தென்ன? இறந்தென்ன? இம்மாளிகையில் மூலைக்கு மூலை போடப்பட்டிருக்கின்ற நவநவ பதார்த்தங்களில் ஒன்றும் எனக்குதவக் காணோம். எந்தப் பதார்த்தத்தை வாயில் வைத்தபோதிலும் விஷமா யிருக்கிறது. எவரையும் சௌக்கியமாக வைத்திருக்கின்ற அச்சண்டாளத் தெய்வம் என்னை மட்டும், கண்ணில் விரலை விட்டாட்டுவதன் காரணம் விளங்கவில்லை. புருஷன் பெண்சாதியைப் பிரித்து வைப்பது மகத்தான பாவமென்றிருக்க, என்னை என்நாதரிட மிருந்து பிரித்துவைத்துள்ள பரமனுக்குப் பாவம் எவ்வளவோ!—'' என்று வயிற்றெரிச்சலைக் கூறிக் கொண்டாள்.

இவை யாவற்றையும் செவிவாய் மடுத்துணர்ந்துகொண்டிருந்த ஞானப்பாட்டி, அப்பெண்ணி னறியாமைக்கு வருந்தி, அவளைநோக்கி, “கண்மணி! நீ உலக அனுபவமும், வாழ்க்கை இரகஸ்யமும் அறியாதவள், என்று நான் சொல்லுவதனால், நீ மனத்தாங்கலடையமாட்டாய் என்று கருதுகின்றேன். * * நான் இப்பொழுது சொலலப்போகின்றதை ச்சற்று கவனமாய்க் கேட்டால் உண்மையை அறிவாய். **நெல்லை விதைத்தவன் நெல்லை அறுப்பான்; புல்லை விதைத்தவன் புல்லை அறுப்பான்** என்று நாம் கேட்டிருக்கிறோமல்லவா? அதுபோலவே, போனபிறப்பில் நன்மையைச் செய்தவர்கள் இப்பிறப்பில் சுகத்தையும், தீமையைச் செய்தவர்கள் துக்கத்தையும் அனுபவிக்கிறார்கள். ஆகையினால் இப்பிறப்பில் நாம் அடையும் சுகதுக்கங்கள், போனபிறப்பில் நாம் விரும்பித் தேடிக் கொண்டவைகளே ஒழிய, கடவுளால் கொடுக்கப்பட்டனவல்ல. உதாரணமாக நாம் அதிக புண்ணியத்தையும் கொஞ்ச பாவத்தையும் பண்ணியிருந்தால், இப்பொழுது அதிக சுகத்தையும், கொஞ்ச துக்கத்தையும் அனுபவிப்போம். அப்படிக்கின்றி, கொஞ்ச புண்ணியத்தையும் அதிக பாவத்தையும் பண்ணியிருந்தால் கொஞ்ச சுகத்தையும் அதிக கஷ்டத்தையும் அனுபவிப்போம். என்னருமருந்தன்னதோழி! ஆற்றுக்குப் போய், ஒருபடியில் தண்ணீர் முகப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அதில் எவ்வளவு நீர் வரும். அதே நாழியை எடுத்துக்கொண்டு, அதிக ஆழமான சமுத்திரத்திற்குப் போய், எவ்வளவு ஆழ அமுக்கி முகக்க முடியுமோ அவ்வளவு ஆழ அமுக்கி முகப்பதாக வைத்துக் கொள்ளுவோம். சமுத்திரம் ஆழமானதாயிற்றே! ஆழ அமுக்கி முகந்தோமே. அந்த நாழி நான்கு நாழி நீரை முகந்ததா? இல்லை. அது எவ்வளவு கொள்ளக்கூடுமோ அதற்குமேல் ஒரு பொட்டுத்தானும் கொள்ளாது. நாழி தான் நாம் செய்த புண்ணிய பாவம். ஆறும் சமுத்திரமும் உலக வாழ்க்கை. நாழி, எந்த இடத்திற்குப் போனாலும், தான் கொள்ளக்

கூடிய ஜலபதார்த்தத்திற்கு மேல் ஒரு பொட்டு தானும் கொள்ளாது. அதுபோலவே, நாம் தரித்திரரா யிருந்தாலும், பணக்காரரா யிருந்தாலும் பிராரத்வத்திற்குத் தக்கபடியே நன்மை, தீமைகளை அனுபவிப்போம். ஆகையினுல், நாம் கடவுளை நொந்து சொள்ளுவதில் பயனில்லை. நாம் அதிக நன்மையைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இப்பிறப்பைத் தந்திருக்கிறுர். தோழி! ஆகையினுல் பக்ஷபாதமற்ற கடவுளை வெறுக்காதே. ஏனெனில், நமக்கு, நிதியும், கணவனும் மனதிற்கிசைந்தவாறமைந்திருப்பினும் விதியை வெல்லுவதாகாது. நீ இப்பொழுது படும் கஷ்டம் உன்னுல் போன பிறப்பில் தேடிக்கொள்ளப்பட்டதே. அதை யறியாது அவரைத் திட்டி, இன்னும் அதிக பாவத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே. கூடிய சீக்கிரத்தில், உன்கணவன் வந்து சேருவான்'' என்று சொல்லிவிட்டு தனக்கதிக நாழிகை யாகிவிட்டபடியால் தான் உட்கார்ந்திருந்த ஊஞ்சலினின்றும் எழுந்திருந்தார். அப்பொழுதவ்விளம் பெண், பாட்டியாரை வலம்வந்து நமஸ்கரித்து, பாட்டி! ஆழ வமுக்கி முகக்கினும், நாழி, ஆழ்கடல் நீர் நால்நாழி முகவாதுபோல, நிதியும் கணவனும் நேர்படினும் தம் தம் விதியின் பயனே பயன் என்பதை யறியாது, அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாயுள்ளவரைக் கண்டபடிபேசி, இவ்வளவு அவ்வளவு எனுதபடி அபராதத்தைச் சம்பாதித்துக் கொண்டேன். இனி, நித்தியனைப் புகழ்ந்தேத்துகிறேன். கருணை வள்ளலான அவர் என் மணாளனைக் கொணர்வர்;'' என்று கூறினள்.

அதைக்கேட்டு ஔவையார் ஆனந்தங் கொண்டு, அவளை ஆசீர்வதித்து, அவ்விடத்தைவிட்டகன்று தன்னில்லம் ஏகினுர். அளவற்ற ஐஸ்வர்யம் அடைந்தும் அனுபவிக்கப் பாக்கியம் பண்ணியிராத அப்பெண் ஸ்திதியை எண்ணிக கிலேசப்பட்டார். மற்றும், அவளைப்போல் உண்மையுணராமல் அவஸ்தைப் படுபவர்களுக்கும் உதவும் பொருட்டு, தன் உபதேசத்தை

ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானுழி—தோழீ!
நிதியுங்கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன். [வாக்குண்டாப்-19.]

என்று ஒரு வெண்பாவாகப் பாடிவைத்தார்.

லால்குடி கே. கந்தசாமி,
தமிழ் ஆசிரியன், குடியாத்தம்.

௨

# தோற்ற வியாதிகள்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுஞ்சில நுண்ணில ஜீவன்கள் மரவர்க்கங்களைப் போன்றவை. இவை நமது கண்களுக்குச் சாதாரணமாகப் புலப்படா. இவைகள் மரஞ் செடிகளைப்போல் கரிய மிலவாயுவிலிருந்து கரியையும் பிராணவாயுவையும் பிரித்து கரியைமட்டும் தமது சரீர போஷணைக்காக உபயோகப் படுத்திக்கொண்டு, பிராணவாயுவை வெளியில் விட்டுவிடுஞ் சக்தியையுடையவை. இவற்றிற்கு சாகவகைகளே உணவாகின்றன. இருப்பினும், சில நுண்ணிய ஜீவன்கள் ஜந்துக்களைப்போல் சிறிது ஆகாரத்தையும் மரவர்க்கங்களைப்போல் சிறிது ஆகாரத்தையும், மற்றுஞ் சில உணவுகளையும் தின்று பிழைக்கும் இயல்புடையவைகளாகவும் இருக்கின்றன. இவ்வகை ஜந்துக்களின் உணவானது கலவை உணவுஎனக் கூறப்படுகிறது.

மேற்கூறிய ஜீவன்களெல்லாம் சாதாரணமாக இருட்டில் நன்றாக விருத்தியாகும். மிக்க பிரகாசமான வெளிச்சத்தினால் அவைகள் விருத்தி நசியும். இக்காரணம்பற்றியே, பிளேக் முதலிய பெருவாரியான தொற்று வியாதிகள் மும்முரமான காலங்களில் சூரிய வெப்பம் படும்படியான ஏற்பாடுகளைச் செய்வது.

இத்தகைய ஜீவன்களைக் காட்டிலும் அவற்றின் முட்டைகளானவை வெயில் குளிர் முதலியவைகளால் சுலபமாக நாசமடையாமலிருக்கும். மிகச் சூடான ஜலத்தில் இச்சீவன்கள் இறந்துபோன போதிலும் அவற்றின் முட்டைகளானவை 130, 132 டிக்ரி உஷ்ணம் ஏறுகிற வரையிலுங்கூட பிழைத்திருக்கின்றன.

இவ்வகை சீவன்களால் உண்டாகும் தொற்றுவியாதிகள் பல உள. அவற்றுள் சிலவற்றை மட்டும் குறிப்பிடுவோம்.

ப்ளேக் என்னும் மஹாமாரி, வெள்ளைரோகம், க்ஷயரோகம், குளிர் காய்ச்சல், க்ரஹணி, வாய்ப்புண், அக்கினியம்மை, சர்மரோகம், படர் தேமல், கபவாத சுரம், சன்னிபாத சுரம், வாந்திபேதி, கபசுரம், கோமாரி, குஷ்டம், உபதம்சம் என்னும் மேகவிரணம் என எண்ணிறந்தவைகளாகும்.

சில தொற்றுவியாதிகள், ரோகிகள் உபயோகப்படுத்திய ஜலம் முதலிய பதார்த்தங்களின் மூலமாய் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் தொற்றும். ரோகிகளால் விடப்படும் ஆசார பதார்த்தங்கள், மல மூத்திராதிகள், உடைகள், அவர்கள் கையாண்ட பாத்திரங்கள் முதலியவை ரோகிகளிட மிருந்து நுண்ணியிர்களையும் அவற்றின் முட்டைகளையும் வேற்றிடங்களுக்கு பரவச்செய்ய ஏதுவாகின்றன. அன்றியும் ஈக்கள், எறும்புகள், கொசுக்கள், மூகட்டுப்பூச்சி முதலிய ஜந்துக்களிடம் சூக்ஷ்ம ஜந்துக்கள் தங்கியிருந்து, கொசு முதலியன நம்மைக் கடிக்கும்போது அவற்றினிடமிருந்து நமதுடலில் அநத ஜீவன்கள் சேர்ந்து விடுவதுண்டு. ஒருவரை யொருவர் தொட்டுக்கொள்வதாலும், வியாதியஸ்தருடனே நெருங்கி அவருடைய சுவாசங்களை நாம் உட்கொள்வதாலும் வியாதிகள் தொற்றும். நமது சரீரத்தில் ஏதாவது காயம் உண்டுபண்ணியும் அல்லது உண்டாயிருக்கும்போதும் மெல்லிய தோலினூடேயும், சுவாச மூலமாகவும், வாயால் விழுங்கியும் நாம் நமது சரீரத்திலாவது, இரத்தத்திலாவது, அல்லது நமதுடலிலுள்ள இதர திரவ பதார்த்தத்திலாவது சூக்ஷ்ம ஜீவன்கள் பிரவேசித்து வியாதியை உண்டாக்க இடந் தருகிறோம். தொற்று வியாதிகளை யுண்டாக்கும் நுண்ணியிர்கள் நமது சரீரத்திலுருந்து எவ்வகை வெளி யேறுகின்றன என்பதையும் கவனிப்போம்.

வாய், கண்கள், மூக்கு, சுவாசப்பைகள் இவைகளிலிருந்து உமிழ்நீர், சளி, கபம், பீளை இவற்றுடன் வெளிவரும்.

குடலி லிருந்து பேதியின் மூலமாய் வெளியாகலாம்.

மூத்திரத்தின் மூலமாகவும் வெளிப்படலாம்.

புண்கள், சிரங்கு இவற்றிலிருந்து வெளியாகும் நிண நீர், சீழ் முதலியவற்றின் மூலமாகவும அவற்றிலிருந்து உலர்ந்து உதிர்ந்துவிடும் செதில்கள் மூலமாகவும் வெளியாகலாம்.

இவ்வகை வெளிப்பட்ட சீவன்கள் முற்கூறிய காரணங்கள் ஏதேனும் ஒன்று பற்றி நமது சரீரத்துட் புகுந்ததும் வியாதியும் வெளிப்படையாகக் காணத்தொடங்கும். நமது சரீரத்துட் பிரவேசிக்கையில் இருந்ததைவிட நுண்ணுயிர்களும் அபரிமிதமாக அதிகரிக்கும்.

(தொடரும்.)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,
ராணி வைத்தியசாலைத் தலைவர், இராணிப்பேட்டை.

# பஞ்சாங்கம்.

## குரோதனஹூ சித்திரைமீ

### இங்கிலீஷ் 1925ஹூ ஏப்ரல்மூ—மேமூ

| சித்திரை | ஏப்ரல்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | திங் | பஞ்41-40 | கேட்39-8 | சித்60 | மேஷரவி நா-6-33-வி, வருஷப்பிறப்பு |
| 2 | 14 | செ | சஷ்35-58 | மூல35-25 | அ35-25சி | |
| 3 | 15 | புத | சப்30-30 | பூரா31-53 | அமி60 | கணிதாரம்பம் செய்ய |
| 4 | 16 | வியா | அ25-25 | உத்28-38 | சித்60 | பிரயாணம் விலக்க |
| 5 | 17 | வெ | நவ20-48 | திரு25-53 | ம25-53சி | வராஹஜயந்தி |
| 6 | 18 | சனி | தச16-40 | அவி23-38 | சி23-38அ | கரிநாள் |
| 7 | 19 | ஞா | ஏ12-55 | சதை21-45 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 8 | 20 | திங் | துவா9-50 | பூரட்20-35 | ம20-35சி | பிரதோஷம் |
| 9 | 21 | செ | திர7-25 | உத்20 | அ20-0சித் | மாச சிவராத்திரி, கிருஷ்ணங்கார சதுர்த்தசி |
| 10 | 22 | புத | ச● 5-50 | ரேவ20-23 | மர60 | சர்வத்திர அமாவாசை |
| 11 | 23 | வியா | அமா5-13 | அசு21-43 | அ21-43சி | [கை |
| 12 | 24 | வெ | பிர5-53 | பர*24-20 | சித்60 | சந்திரதெரிசனம், கிருத்தி |
| 13 | 25 | சனி | துதி7-45 | கிரு28-20 | அமி60 | |
| 14 | 26 | ஞா | திரி11-10 | ரோ33-38 | சித்60 | |
| 15 | 27 | திங் | சது15-53 | மிரு40-10 | அ40-10சி | |
| 16 | 28 | செ | பஞ்21-38 | திரு47-35 | ம47-35சி | |
| 17 | 29 | புத | சஷ்27-58 | புன55-20 | சித்60 | |
| 18 | 30 | வியா | சப்34-18 | பூசம்60 | அமி60 | |
| 19 | 1 | வெ | அஷ்40-5 | பூசம்2-50 | மர60 | |
| 20 | மேமீ 2 | சனி | நவ44-38 | ஆயி9-38 | மர9-38அ | |
| 21 | 3 | ஞா | தச47-25 | மகம்14-55 | ம14-55சி | |
| 22 | 4 | திங் | ஏ48-13 | பூரம்18-23 | சித்60 | |
| 23 | 5 | செ | துவா47-8 | உத்19-53 | அ19-53சி | பரசுராம துவாதசி |
| 24 | 6 | புத | திர44-5 | அஸ்19-28 | ம19-28சி | பிரதோஷம் [மழை |
| 25 | 7 | வியா | சது39-25 | சித்17-15 | சி17-15அ | நரசிம்மஜயந்தி 10-க்குள் |
| 26 | 8 | வெ | ○33-30 | சுவா14-20 | சித்60 | சித்ரா பௌர்ணமி |
| 27 | 9 | சனி | பிர26-28 | விசா8-58 | சித்60 | வைசாகபகுளம் |
| 28 | 10 | ஞா | துதி19-3 | அனு3-43 கேட்58-3 | மர58-3அ | அவமாகம் |
| 29 | 11 | திங் | திரி11-35 | மூல52-38 | சி52-38ம | விவாகம், யாத்திரை செ |
| 30 | 12 | செ | சது4-15 பஞ்57-30 | பூரா47-40 | சி47-40அ | அவமாகம் [ய்ய |
| 31 | 13 | புத | சஷ்51-20 | உத்43-20 | அ43-20சி | ரிஷபரவி நா-29-15, வாகனமேற |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செ | |
| | 3-மே-சுக் 16-மிது-செ 16-மீன-வ-பு 24-மே-புத 27-ரிஷ-சுக் | | ராகு |
| கே | | | |
| குரு | | சனி | |

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யும் ... ரூ. 8—0—0

கைவல்ய நவநீத வினவிடை

(ஷையார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன வினவிடைஷை ஷை ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷையார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகானந்தர் உபன்யாச ஞானத்திரட்டு ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன்கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

மனீஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜாதுறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாகாஜீவ வாதக்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷை (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

கார்யசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—5—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).